# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
ஆவணி 26
ரம்ழான் பிறை 19
ஞாயிறு (11-9-77)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 27

விலை சதம் 60


# கொலைக்களத்துக்கு மீண்டும் ஏன் அழைக்கிறீர்கள்?

**சுதந்திரன் முகவரி!**

சுதந்திரனுடன் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் பின்வரும் தற்காலிக முகவரிக்கு எழுதுமாறு கோரப்படுகின்றனர்.

ஆசிரியர்
சுதந்திரன்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## அரசாங்கக் குழுவிடம் தமிழ் அரசாங்க ஊழியர்கள் கேள்வி!


''எங்களுக்கு தேவையான நேரத்தில் பாதுகாப்பு தர மறுத்து, சிங்கள இன வெறியர்களின் கைகளில் அநாதைகளாக எங்களை விட்டுவிட்ட நீங்களும் உங்கள் அரசும், எங்கள் சக தமிழ் ஊழியர்கள் பலரின் உயிரையும், எங்கள் சொத்துக்களையும் பறிகொடுத்து உயிர் தப்பி உடுத்த உடையுடன் இங்கு ஓடி வந்திருக்கும் எங்களைப் பார்த்து மீண்டும் வாருங்கள் வேலைக்கு—உங்களுக்குப் பாதுகாப்பு தருகிறோம் என்று அழைக்கிறீர்களே — உங்களை நம்பி நாங்கள் எப்படி வரமுடியும்? மீண்டும் எங்களைக் கொலைக்களத்துக்கு அழைக்கிறீர்களே—அங்கு எம்மால் எப்படி வர முடியும்? எந்த முகத்துடன் எங்களை அழைக்கிறீர்கள்?''

—இவ்வாறு தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த பாதுகாப்பு அமைச்சு நிரந்தரச் செயலாளர் திரு. ஜெயசிங்கா, இராணுவத் தளபதி சேபால அட்டிகலை ஆகியோரைக் கொண்ட குழுவினரிடம் உள்ளம் உருகும்படி தெரிவித்தனர்.

12-9-77 ல் தமிழ் அரசாங்க ஊழியர்களை வேலைக்கு திரும்புமாறும், சகல பாதுகாப்பும் தரப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்திருந்தது அல்லவா? அதைத் தொடர்ந்து, தமிழ் அரசாங்க ஊழியர்களை நேரடியாகச் சந்தித்து இது பற்றிப் பேசுவதற்குப் பாதுகாப்பு அமைச்சு நிரந்தரச் செயலாளர் திரு. ஜெயசிங்கா தலைமையில் ஒரு தூதுக் கோஷ்டியை அரசு யாழ்ப்பாணம் அனுப்பியிருந்தது. இந்தத் தூதுக் குழுவில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலையும் வந்திருந்தார்.

இவர்களது அழைப்பின் பேரில் சிங்கள நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்துள்ள தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்கள், டாக்டர்கள், புகைவண்டி ஊழியர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், மத்திய வங்கி ஊழியர்கள், அஞ்சல் எழுதுவினைஞர்கள், ஆசிரியர்கள் உட்பட பல்துறையினரின் பிரதிநிதிகள் யாழ். அரசாங்க செயலகத்தில் அரசாங்கத் தூதுக் குழுவைச் சந்தித்துப் பேசினர். அப்போது தமிழ் அரசாங்க ஊழியர்கள் பிரதிநிதிகள் தமது நிலையை மனம் விட்டு எடுத்துரைத்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)





யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தின் முன்னுள்ள புத்தகக் கடைகள் எரிக்கப்பட்டு சாம்பராக்கப்பட்ட போதும் மகாத்மா காந்தியால் தம் கைப்பட எழுதிய வைர வரிகள் மட்டும் தீயின் கோர நாக்குகளுக்குத் தப்பிக் கிடந்து தமிழினத்துக்கு ஆசி வழங்கியது.


## அமிருக்கும் சிவாவுக்கும் தீங்கு விளைக்கத் திட்டம்?

கலவர நேரத்தில் அமைச்சர்களால் கூட எங்களைக் காப்பாற்ற முடியவில்லை — திணைக்களத் தலைவர்களின் மறைமுக ஆதரவுடன், திணைக்களங்களிலுள்ள சக சிங்கள ஊழியர்களும், எமக்குக் கீழ் வேலை செய்யும் சில்லறை சிங்கள ஊழியர்களும், எமக்கு அடித்து உதைத்திருக்கின்றனர்; எம்மில் பலரை கொன்

(8ம் பக்கம் பார்க்க)



தமிழ் வளர்த்த யாழ்ப்பாணத்துப் புலவர் சோமசுந்தரனார், தமிழ்ப்பெரும் புலவர் வள்ளுவனார், ஔவை மூதாட்டி ஆகியோரின் சிலைகள், சிங்கள இன வெறியர்களால் யாழ்ப்பாணத்தில் சீரழிக்கப்பட்டுக் காணப்படும் கோலம் இது! படம்: எவிஎம்



பொலிசாரால் எரிக்கப்பட்டும் உடைக்கப்பட்டும் காணப்படும் யாழ்ப்பாணம் பழைய சந்தையின் இந்தத் தோற்றத்தைக் காணும்போது வயிறு எரிகிறதல்லவா?

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஈழத்தமிழர்கள் எக்கேடாவது கெட்டும் என்று விட்டுவிடமாட்டோம்!”

## சென்னையில் கருணாநிதி பேச்சு

**''நம்முடைய - தமிழர்களுடைய—உணர்வுகளை இலங்கை பிரதமர் ஜெயவர்தன அவர்கள் மதிப்பார்கள் என்று நம்புவோம். நம்முடைய உணர்வுகளை மதித்து இந்தியப் பிரதமர் அவர்கள் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவார் என்று நாம் ஏற்றுக்கொள்வோம். இவைகள் எல்லாம் ஏற்படாவிட்டால், அதற்குப்பிறகு இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் எக்கேடாவது கெட்டுப்போகட்டும் என்று விட்டுவிட வேண்டியவர்களாக நாம் இருக்கமாட்டோம் என்பதை தெரிவித்துக்கொள்வது தமிழ் குருதியோடும் ஒவ்வொரு தமிழனுடைய உணர்வாகும்''**

இவ்வாறு தமிழகத் தலைநகரான சென்னையில் மயிலையில் 28-8-77 ல் நடைபெற்ற இலங்கைத்தமிழர் கூட்டத்தில் பேசிய திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார்.

தி மு. கழகம் ஏற்பாடு செய்திருந்த இக் கூட்டத்தில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் இ. வீரமணி, ஆற்காடு வீராசாமி, ஆர். டி. சீதாபதி, உட்பட பலர் உரையாற்றினர்.

கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் மேலும் தமது பேச்சில் கூறியிருப்பதாவது :-

''இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்களுக்கு கடந்த ஓராண்டு காலத்திற்குள் எத்தனையோ வேதனைகள். அவர்களுடைய வழிகாட்டியாகத் திகழ்ந்த திருச்செல்வம் திடீரென்று ஒரு நாள் மறைந்தார். அதைத் தொடர்ந்து அவர்களுடைய தானைத்தளபதிகளில் ஒருவராக விளங்கிய பிரபல வழக்றிஞர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் திடீரென்று ஒரு நாள் பிரிந்துவிட்டார்.

இலங்கைத் தமிழர்களை நீண்ட நெடுங்காலமாக வழிநடத்திச் சென்று, அவர்களுடைய உரிமைக் கருத்துக்களை போராடி, அவர்களுடைய வாழ்வோடு தன்னுடைய வாழ்வையும் இணைத்துக்கொண்டு எல்லா விதமான தியாகங்களுக்கும் தயாராக இருந்து, நடமாடமுடியாத நிலை, உரக்கப்பேச முடியாத உடல் நலிவு, அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், இலங்கையிலே வாழுகின்ற தமிழர்களைப்பற்றி தாய்த்தமிழகத்திலே வந்து சொல்ல வேண்டுமென்று ஆறேழு ஆண்டுகளுக்கு முன்பு, அருமை நண்பர் இன்று இலங்கையிலே தமிழர் தலைவராக இருக்கிற அமிர்தலிங்கம் அவர்களோடு தமிழகத்திற்கு வந்து தமிழ்நாட்டுத் தலைவர்களையெல்லாம் சந்தித்து இலங்கைத்தமிழர்களின் அவதிகளையெடுத்துச் சொல்லி, தமிழ் நாட்டுத் தமிழர்களுடைய ஆதரவு என்றென்றும் இலங்கையிலேயிருக்கிற தமிழர்களுக்குத் தேவையென்பதை வற்புறுத்தி பிறகு இலங்கை திரும்பி, நீண்ட பலகாலமாக இலங்கைத் தமிழர்களின் பண்பாடு, மொழி, கலாசாரத்திற்காக உரிமைகள் நிலைப்பதற்காக போர்க்குரல் கொடுத்து ஈழத்தமிழகத்தை கேட்பதைத் தவிர இலங்கையிலே இருக்கிற சிங்களவரிடமிருந்து மீள வேறு வழியில்லை என்று தமிழ்நாடு விடுதலை இயக்கத்தை இலங்கையிலே உருவாக்கி அதனுடைய தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த தந்தை செல்வா என்கிற இலங்கையின் கிழச் சிங்கம், — அதுவும் மறைந்தது.

இப்படி மூன்று பெரும் இழப்புக்கள் அவர்களுக்கு ஏற்பட்டது. அந்த மூன்று பேரையும் இழந்து நிற்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படுகின்ற கெடுபாடுகளை எண்ணும் போது, அந்த வேதனைகளுக்கு ஆளாகின்ற தமிழர்கள் ஒரு காலம் இல்லாவிட்டாலும் மற்றொரு காலம் அவர்கள் எல்லாம் இல்லையே என்று சொல்லத்தான் செய்வார்கள். அந்த மூன்று பேரும் ஈழத்தமிழர்களுக்கு எந்த அளவிற்கு ஆறுதலாக வாழ்ந்தார்களோ – அதே யளவு ஆறுதலைத்தான் இன்றையதினம் தமிழகத்திலேயிருக்கிற நாலரைக் கோடி தமிழர்களும் இலங்கைத்தமிழர்களுக்காக அளிக்க முன்வந்திருக்கிறார்கள்.

இந்தப்பிரச்சனையிலே உணர்வைக் காட்டுவது என்பது ஒன்று; உணர்ச்சியை காட்டுவது என்பது ஒன்று; உணர்வு — உணர்ச்சி இரண்டும் ஒன்றாகி விடாது. நாம் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற நிலையில் தான் இன்று இருக்கிறோம். உணர்ச்சியை செயல்படுத்துகின்ற நிலையிலே இன்று நாம் இல்லை.

காரணம் – இது மற்றொரு வெளிநாட்டின் பிரச்சினை என்று எடுத்துச் சொல்லப்படுகிற நேரம் — மத்திய அரசும் இந்தப்பிரச்சினையை அதிக சிக்கலாக ஆக்கிவிடாதீர்கள் என்று எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் நாம் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு விடாமல் நம்முடைய உணர்வுகள் மதிக்கப்படும் என்று கருதியிருப்போம். நம்முடைய உணர்வுகளை இலங்கைப் பிரதமர் ஜெயவர்த்தன அவர்கள் மதிப்பார்கள் என்று நம்புவோம். நம்முடைய உணர்வுகளை மதித்து இந்தியப் பிரதமர் அவர்கள் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவார் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இவைகள் எல்லாம் ஏற்படாவிட்டால், அதற்குப்பிறகு இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் எக்கேடாவது கெட்டுப்போகட்டும் என்று விட்டுவிட வேண்டியவர்களாக இருக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வது தமிழ்க் குருதியோடும் ஒவ்வொரு தமிழனுடைய உணர்வாகும். நாம் உணர்வு என்ற கட்டத்திலே இப்போது இருக்கிறோம், உணர்ச்சியென்ற கட்டத்திற்கு நம்மை யாரும் தள்ளிவிடமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

இலங்கையிலே எழுந்துள்ள பிரச்சினை; இன்று நேற்று அல்ல; பல ஆண்டுகளாக இருக்கின்ற பிரச்சினை; இலங்கையிலே இருக்கிற சிங்களவர் ஆனாலும் தமிழர் ஆனாலும் இருவருமே அங்கு குடியேறியவர்கள் என்பதற்கு சரித்திர சான்றுகள் உண்டு. அதைப் போலவே இருவருமே இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்கிற அந்த வாதத்திலும் தமிழர்களை அங்கே புறக்கணித்து விட முடியாது.

### இலங்கைத் தமிழர் குறித்து அண்ணா

1961-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு பேரணியை தமிழகத்திலே நடத்தினார். அப்போது அண்ணா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்களின் கட்டுரையை ''இலங்கையில் இனவெறி ஆட்சி'' என்கிற ஒரு நூலில், அதனை எழுதிய நண்பர் வைத்தியலிங்கம் இணைத்திருக்கிறார். நண்பர் மணவைத்தம்பி என்னிடம் அந்த நூலைக் கொடுத்தார். அந்தக் கட்டுரையில் அண்ணா அவர்கள், ''தமிழ் இனத்தாரை சிங்களவர் அழித்து விடவேண்டும் என்ற முயற்சியில் வஞ்சகமாக ஈடுபடும்போது, அதை உள்நாட்டுச் சம்பவம் என்று விட்டுவிட முடியுமா? கணவனும் மனைவியும் வீட்டுக்குள் அமைதியான வாழ்வு நடத்துகிறபோது — கொஞ்சிக் குலாவுகிறபோது அங்கு பக்கத்து வீட்டுக்காரனுக்கு வேலை இல்லை; ஆனால் மனைவியின் கழுத்தை அறுக்க கணவன் கொடு வாள் தூக்கிவிட்டபோது—அதைக் கண்ட மனைவி ‘ஐயோ, ஐயோ என்னைக் காப்பாற்ற யாருமில்லையா? என்று அலறுகிறபோது அது வீட்டு விஷயமாகாது; பக்கத்து வீட்டுக்காரன் பாய்ந்துதான் தீர வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு தலையிடா விட்டாலோ—அல்லது இதை உலக மன்றத்தின் முன் வைத்து நீதி கோரா விட்டாலோ நாளை நிலைமை இன்னும் விபரீதமாகும்; தமிழர்கள் அனைவரும் அங்கேயிருந்து துரத்தப்பட்டால் பின் அவர்களின் கதி என்ன? இலங்கை மண்ணில் சிங்களவர்களுக்கு இருக்கிற உரிமை தமிழர்களுக்கும் உண்டு. ஏனெனில், இரு இனத்தாருமே அங்கு சென்று குடியேறியவர்கள்தான். தமிழர்கள் தமிழகத்திலிருந்து சென்றார்கள் என்றால், சிங்களவர்கள் பீகாரிலிருந்து சென்றவர்கள் என்று கருதப்படுகிறது. அந்த இரு இனத்தாரில் யார் முதலில் குடியேறினார்கள் என்பதற்குத் தான் சரியான சரித்திர ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அநுராதபுரம் என்ற இடத்தில் தமிழ் மன்னன் ''எல்லாளன்'', சிங்கள குமாரன் ''துட்டகைமுனு என்பவரை சண்டைக்கழைத்திருக்கிறார். இது சரித்திர உண்மை. ஆகவே அங்கு வாழும் தமிழர்கள் எந்த வகையிலும் சிங்களவர்களைப் போலவே சம உரிமை உள்ளவர்கள். ஆகவே அவர்கள் தங்களுடைய மொழிக்காக, கலாச்சாரத்திற்காகப் போராட உரிமை கொண்டிருக்கிறார்கள்'' என்று அண்ணா அவர்கள் வெகு அழகாக அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அப்படி குறிப்பிட்ட அண்ணா அவர்கள் கழகத்தின் சார்பில் ஒரு பேரணி எடுத்தபோது, அது சரியல்ல என்ற ஒரு கருத்தை இலங்கைப் பிரதமர் அப்போதைய இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு எழுதுகிறார். அந்தச் செய்திக் குறிப்பும் இந்தப் புத்தகத்திலே இருக்கிறது. அப்படி இலங்கை அரசு இந்திய அரசுக்குத் தெரிவித்தபோது, இந்தியப் பேரரசு தன்னுடைய நிலையை இலங்கை அரசுக்கு விளக்கியது. எப்படி விளக்கியது என்றால், ''தி. மு. கழகம் காங்கிரசுக்கு எதிராக இயங்கும் ஒரு அரசியல் கட்சி. உண்மையில் அதனுடைய நடவடிக்கைகளைத் தடுக்க முடியாது. ஒரு சுதந்திர நாட்டில் எழுத்துரிமை, பேச்சுரிமை அடிப்படையில் ஒரு இயக்கம் தோற்றுவித்துத் தன்னுடைய எண்ணத்தை உரைக்க முடியும். அதைத் தடுக்க முடியாது'' என்று இலங்கை அரசுக்கு இந்திய அரசால் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது.

இவைகளை நாம் சொல்லக் காரணம் இடையில் நாம் பேச்சுரிமையை இழந்திருந்தோம். ஆனால் எழுத்துரிமை, பேச்சுரிமைகளை நாம் வரையறைக்கு உட்பட்டுப் பயன்படுத்தவேண்டும் என்பதையும் நான் உணராதவன் அல்ல. அதே நேரத்தில் இன்றைக்கு இலங்கையில் படுகொலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிற தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என்கிற கொதிப்புணர்ச்சி ஏதோ அரசியல் ரீதியாக நாம் உருவாக்கிக் கொண்ட ஒன்றல்ல. உலகத்தில் வாழும் எந்தவொரு தமிழனுக்கு ஒரு அவதி ஏற்பட்டாலும், தமிழகத்திலே இருக்கிற நான்கு கோடி தமிழர்களும் துடித்தே தீருவார்கள். அதை அடக்க யாராலும் முடியாது. சில மாதங்களுக்கு முன்னுள் லண்டனில் இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் சிலர் வன்முறைக்கு ஆளாக்கப்பட்

(7ம் பக்கம் பார்க்க)

### இனக் கலவரம் விபரங்கள் தேவை!

சிங்கள இன வெறியினால் பாதிக்கப்பட்டு, உயிரிழந்து, பொருள் இழந்து, சொத்து இழந்து சுமார் 50,000 மக்கள் தமிழ் ஈழம் திரும்பியுள்ளனர்.

ஏராளமானோர் — பலநூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் கடைகள் எரித்து சாம்பராக்கப்பட்டுவிட்டன; பல பெண்கள் நடைபெற்ற பயங்கரத்தைக் கண்டு பீதியடைந்து சித்த சுவாதீன நிலையை அடைந்துள்ளனர்.

எனவே முழு விபரங்களையும் திரட்டுவதற்காக நடைபெற்ற உண்மையான சம்பவங்களை சுதந்திரனுக்கு அனுப்பிவைக்குமாறு பாதிக்கப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கொலைசெய்யப்பட்டவர்களின் விபரம் (முடிந்தால் அவர்களது படத்துடன்), சொத்து சூறையாடப்பட்ட விபரம், நீங்கள் அடைந்த பயங்கர அனுபவம், கோவில்கள், வீடுகள் உடைக்கப்பட்டிருந்தால் அதன் விபரம் — எந்த அகதி முகாமிலிருந்து வந்தவர்கள் — என்பது போன்ற விபரங்களை முழுப் பெயர் விலாசத்துடன் சுருக்கமாக எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.


அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆசிரியர், சுதந்திரன்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "என் நெஞ்சுக்கு நேரே குறிபார்த்தபடி துப்பாக்கியுடன் வந்தனர் பொலிசார்!"

## தேசிய அரசப்பேரவையில் அமிர்தலிங்கம்



தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம் நடத்திய இயக்கத்தின் அல்லது போராட்டத்தின் விளைவாகத்தான் யாழ்ப்பாணத்தில் அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருவதாக நாடெங்கும் ஒரு கருத்துநிலவி வருகிறது. இக்கருத்தை உண்மையாக்கும் முயற்சியில் பொலிசார் படாதபாடுபட்டு வருகின்றனர். இது முழுக்க முழுக்க பொய்யானது என்பதை இங்கு நான் நேரடியாக எடுத்துக் கூறவிரும்புகிறேன். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களின் உண்மைகளை இங்கு சுருக்கமாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

யாழ்ப்பாணத்தில் பொலிசார் நடத்திய கொடூர வெறியாட்டமே ''1977 இனக்கலவரமாக'' உருவெடுத்து பலநூறு தமிழர்களைப் பலியெடுத்து—தமிழர் சொத்துக்களை சூறையாடி—ஒரு இலட்சம் தமிழர்களை ஒட்டாண்டிகளாக்கியுள்ளது. ஆகஸ்ட் 12, 13, 14, 15, 16, 17ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பொலிசார் செய்த அட்டூழியங்களை 18-8-77ல் தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் விபரமாக எடுத்துரைத்திருந்தார். இந்த விபரங்களையும், பொலிசார்மீது அமிர் தொடுத்த குற்றச்சாட்டுக்களையும் பிரதமர் துளியும் மறுக்கவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. திரு. அமிர்தலிங்கம் அவர்களுடைய குறிப்பிட்ட உரையின் முதற் பகுதி இன்று இடம் பெறுகிறது இரண்டாவது பகுதி அடுத்த புதன் இதழில் இடம்பெறும். —ஆர்

யாழ்ப்பாணம் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு நிதி சேர்க்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் ரோட்டரி சங்கத்தினரால் சம்பத்திரிசியார் கல்லூரியில் ஓர் காணிவல் நடைபெற்றுவந்தது. கடந்த வெள்ளிக்கிழமை (12-8-77) சாதாரண உடைஅணிந்த பொலிசார் சிலர் டிக்கெட் பெற்றுக்கொள்ளாமலே காணிவல் மைதானத்துக்குள் நுழைய எத்தனித்திருக்கிறார்கள். நுழை வாயிலில் இருந்த மனிதர் டிக்கெட்டை வாங்குமாறு பொலிசாரிடம் கூறியிருக்கிறார். இதனால் டிக்கெட்டை வாங்கிக்கொண்டு உள்ளே சென்ற பொலிசார், அங்கு நுழை வாயிலில் இருந்தவரைப்பற்றி கேவலமாகப் பேசியிருக்கிறார்கள். இவர்கள் உள்ளே சென்று மது அருந்தினார்கள்; அதன் பின்னர் நுழைவாயிலில் இருந்தவருடன் தாமாகவே வலிய மோதலுக்கு சென்றிருக்கின்றனர். இந்த மோதலின்போது ஒரு பொலிஸ்காரன் அவரைத் தாக்கியிருக்கிறான். இதையடுத்து ஒரு பெரிய கும்பல் பொலிசாரை சுற்றிக் கூடிவிட்டது! நுழைவாயில் மனிதரோ தந்திரமாக, தாம் இந்தப் பிரச்சினையை கவனித்துக்கொள்வதாகக்கூறி கூடிய பொதுமக்களை அனுப்பிவிட்டார். அத்துடன் அப்பிரச்சினை தீர்ந்துபோயிற்று காணிவலும் முடிவடைந்தது.

அடுத்த நாள் சனிக்கிழமை —காணிவலின் இறுதி நாளன்று— காணிவல் பொறுப்பாளர்களில் ஒருவராகிய டாக்டர் பிலிப்ஸ் யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு, பொலிசார்பற்றிபொதுமக்களிடையே கொந்தளிப்பும் கசப்பும் நிலவுகின்ற காரணத்தினால் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக காணிவலுக்கு பொலிசார் எவரையும் அனுப்பவேண்டாமென கேட்டுக் கொண்டார். நான் இங்கே குறிப்பிடுவது சீருடையணிந்த பொலிசாரை அல்ல; சீருடையின்றி சாதாரண உடையில் காணிவலுக்குச் சென்று 'முஸ்பாத்தி' பண்ணுகிறவர்களை பற்றியே குறுப்பிடுகிறேன்.

ஆனால் சனிக்கிழமை நடைபெற்றதென்னவென்றால், சாவகச்சேரியிலிருந்தும், ஆனைக்கோட்டையிலிருந்தும் பொலிசார் சிவில் உடையில் காணிவலுக்கு சென்று குடித்துவிட்டு குழப்பம் செய்திருக்கின்றனர், இதனால் சிவில் உடையிலிருந்த இந்தப்பொலிசாருக்கும், அங்கிருந்த பொது மக்களுக்கும் மோதல் ஏற்பட்டது! இதனால் சில பொலிஸ் காரர்கள் காயமடைந்தார்கள். ஒருவர் யாழ் மருத்துவமனையிலும், இன்னொருவர் சாவகச்சேரி மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டனர். அதன் பின் ஞாயிறு காலையிலிருந்து யாழ் மாநகரத்திலும் வேறு இடங்களிலும், பொது மக்கள் மீது பொலிசார் தாக்குதல் நடத்தத்தொடங்கினர்.

ஞாயிறு காலை, ஏராளமான லொறிகள் தடுத்து நிறுத்தப்பட்டு, அதில் பயணம் செய்தோர்—லொறி ஓட்டிகள் உட்பட—தாக்கப்பட்டனர். அது புதன்கிழமை வரை நீடித்தது. பொலீசிடமிருந்து எனக்கு கிடைத்த தகவலின்படி—யாழ்ப்பாணநகரிலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள புத்தூரில் ஞாயிறு நள்ளிரவு 12 மணிக்கு ஜீப்பில் சென்ற பொலீசார் சைக்கிளில் சென்ற மூவரை மறித்திருக்கின்றனர். அவர்களை சோதனை செய்ய விரும்பியிருக்கின்றனர். அவர்கள் யார் என்பது யாருக்கும் தெரியாது. அவர்கள் வழிப்பறிகாரர்களாகவோ—திருடர்களாகவோ இருக்கக்கூடும், பொலீசார் சோதனையிட முயற்சிக்கும்போது அவர்களில் ஆயுதம் தரித்திருந்த ஒருவன், பொலீசை நோக்கி சுட்டிருக்கிறான்; ஒரு பொலீஸ் காரர் இதனால் காயமடைந்தார். சைக்கிளில் வந்த மூவரும் ஓடி விட்டனர்.

அடுத்தநாள் சம்பவம் நடைபெற்ற புத்தூரிலிருந்து பத்து மைல் தூரத்திலிருக்கும் யாழ்ப்பாண மாநகரத்தில் தெருவில் சென்ற ஒன்றுமறியாத பொது மக்கள்மீது பொலீசார் கண்டகண்டபடி தாக்கத்தொடங்கினர். இ. போ. ச. ஊழியரான யேசுதாசன் என்ற நபர் வேலைக்கு செல்லும்போது வழியிலே தாக்கப்பட்டு அருகிலிருந்த குளத்துக்குள் தூக்கி வீசப்பட்டார். இவரை விட இன்னுமிருவர் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதையடுத்து யாழ், பா. உ. திரு. யோகேஸ்வரனிடம் புகார் செய்யப்பட்டது.

திரு. யோகேஸ்வரன் உடனடியாக 15-8-77 திங்கள் காலை கொழும்பிலுள்ள பொலீஸ்மா அதிபருக்கும், பதில் பாதுகாப்பு அமைச்சருக்கும் தந்தி அனுப்பினார். அந்த தந்தியிலிடம்பெற்றிருந்த வாசகம் இது தான்:—

''யாழ், பொதுமக்கள் மீது பொலீசார் நடத்தும் தாக்குதல் அடாவடித்தனமாகவும் காரணமின்றியும் நடைபெறுகிறது. மூவர் மிக மோசமான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உடனடியாக விசாரணைக்கு ஏற்பாடு செய்யுங்கள். நிலைமையை கட்டுப்படுத்தும்படி பொலீஸ் சுப்ரீன்டென்டனுக்கு உத்தரவிடுங்கள்!''

யோகேஸ்வரனின் தந்தியினால் எதுவித பிரயோசனமும் ஏற்படவில்லை! சாவகச்சேரியிலும் மற்றும் தூர இடங்களிலும் பொலீசார் காரணமின்றி பொதுமக்களை தாக்குவதாக திங்கட்கிழமை (15-8-77) மாலை புகார்கள் கிடைத்தன. எனவே அன்று மாலை யாழ், பொலீஸ்அதிபருக்கு நான் பல தடவை 'போன்' செய்தேன். அவருடைய நேரடித் தொலை இலக்கத்திலிருந்து எதுவித பதிலும் வரவில்லை. யாழ் பொலீஸ் நிலையத்திலுள்ள மேலதிக தொலைபேசித் தொடர்புகள் மூலம் அவருடன் தொடர்பு கொள்ள நான் முயற்சித்தபோது—அவையாவும் பழுதடைந்து விட்டதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் பொலீஸ் அதிபர் கோட்டைக்குள்ளே வசிப்பதாலும், கோட்டைக்குள் நுழைவதற்கு வாசலில் நிற்கும் பொலீஸ் காரர்கள் யாரையும் அனுமதிக்காததாலும், பொலீஸ் அதிபரை யாரும் காணமுடியவில்லை.

இறுதியாக ஒரு உதவி பொலீஸ் அதிபருடன் நாங்கள் தொடர்புகொள்ள முடிந்தது. நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூறி இவற்றுக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு அவரிடம் கேட்டுக்கொண்டோம். இது 16-8-77 அதிகாலை நடைபெற்றது.

மீண்டும் சிவில் உடை அணிந்த பொலிசார் யாழ் மாநகரத்தில் அராஜகம் விளைவிக்கத் தொடங்கினார்கள். பழைய சந்தைக் கட்டடத்துக்குப் போன அவர்கள், ஏராளமான கடைகளை தீமூட்டி எரித்தார்கள். ஒரு கடைக்கு மண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்தார்கள். சுலபமாக நெருப்புப் பிடிக்கக்கூடிய பனையோலைப் பாய், கடகம் விற்கின்ற கடைக்குள் நுழைந்து மண்ணெண்ணையூற்றி நெருப்புக் கொழுத்தினார்கள். அதிர்ஷ்டவசமாக அங்கு படுத்திருந்த சிலர் உடனடியாக எழுந்து நெருப்பை அணைத்தனர். இவர்கள் தொடர்ந்து வழியில் தென்பட்ட ஏராளமான கடைகளை உடைத்தெறிந்ததுடன், பெயர்ப்பலகைகளையும் உடைத்தெறிந்தனர். யாழ் மருத்துவ மனையருகில் இவர்களை ஒரு பொலிஸ் டிறக் ஏற்றுமட்டும் இந்த நிலைமை நீடித்தது.

டி. ஐ. ஜி இப்போது அது பொலிஸ் டிறக் அல்லவென்று கூறுகிறார்; அது ஓர் இன்ரநாஷனல் டிறக் – 23 ஸ்ரீ 3977 இலக்கமுடையது. அது தான் எமக்கு தரப்பட்ட தகவலாகும். இதுபற்றி நேரில் கண்டவர்கள் சாட்சியம் கூறவிருக்கிறார்கள். இரண்டாவது படக்காட்சி பார்த்துவிட்டு வந்தவர்களும் தாக்கப்பட்டுள்ளனர்; அப்படி வந்தவர்களில் சிலர் அராஜகம் புரிந்த பொலிசார் குறித்த டிறக்கில் போவதையும் பார்த்திருக்கிறார்கள்.

16-8-77 செவ்வாய் காலை யாழ்ப்பாணத்தில் பதட்ட நிலைமை மோசமாகியது. பொலிசாரின் தாக்குதலினாலும், அத்துமீறிய நடவடிக்கைகளினாலும் பாதிப்புற்ற மக்கள் யாழ் பா. உ. யோகேஸ்வரனுடன் தொடர்புகொண்டு புகார் செய்தனர். மீண்டும் யாழ். பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொள்வதற்கு முயற்சித்தோம். யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொள்வதை விட—அதிகாலை ஏழு மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிலிருக்கும் பிரதமருடன் தொடர்பு கொள்வது எமக்கு சுலபமாக இருந்தது. நான் பிரதமருடன் பேசிய பின்னர் கோப்பாய் பா. உ. கதிரவேற்பிள்ளையும் பிரதமருடன் பேசினார்; தாம் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் இது சம்பந்தமாக உடன் நடவடிக்கையெடுக்கும்படி உத்தரவிடுவதாக எம்மிடம் பிரதமர் தெரிவித்தார்.

இதன்பின்னர் யாழ் பொலிஸ் அதிபருடன் ஒரு மாதிரியாகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது, உண்மையில் அவருடன் நேரடியாகப் பேசுவதற்கு, அவருடைய நேரடியான தொலைபேசி இலக்கத்தை எடுத்தேன் — பதில் இல்லை; பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து அவருடைய தொலைபேசிக்கு போடும்படி கேட்டேன்; அதற்கு ''லைன் அவுட் ஒப் ஓடர்'' என்று கூறி விட்டார்கள் — பின்னர் நான் கூறினேன் – ''ஒரு மோசமான சூழ்நிலை உருவாகி வருகிறது; உங்கள் எஸ். பி. என்ன செய்கிறார்? நான் எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறேன் — இது மிகவும் பாரதூரமான விஷயமாதலால் – ஐந்து நிமிடத்தில் எஸ். பி. யை என்னுடன் பேசுமாறு கூறுங்கள்'' என்று கூறினேன்.

ஐந்து நிமிடங்கள் கழித்து பொலீஸ் அதிபர் என்னுடன் பேசினார். தமது தொலைபேசியில் எதுவித பிழையும் இருக்கவில்லையென்று அவர் கூறினார். ''அது நீங்கள் கவனிக்கவேண்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழனின் இதயகீதம்

**அன்பு நண்பா,**

வேதனைக்குமேல் வேதனையையும்—சோதனைக்குமேல் சோதனையையும் ஈழத்தமிழினமும்—ஈழத்தமிழினத்தின் விடுதலைக்குப்போராடும் நம்முடைய விடுதலை இயக்கமும் இன்றையதினம் சந்தித்துக்கொண்டிருக்கிறது. யாரைப்பார்த்தாலும்—எவர் கூறுகின்ற கதையைக் கேட்டாலும்—விம்மலும் வேதனையும் கண்ணீரும் வெடித்துக்கிளம்புகின்றன; யாருக்குயார் ஆறுதல் கூறுவது—யாருக்குயார் தேறுதல் கூறுவது — என்னதான் ஆறுதலும் தேறுதலும் கூறினாலும் தமிழ் சமுதாயத்துக்கு இன்று ஏற்பட்டிருக்கிற மனப்புண் எப்போதேனும் ஆறக்கூடிய புண்ணும் அல்லவே! ஒவ்வொரு தமிழன் கூறுகிற கதையும் ஒரு பயங்கர நாவலாக(TRAGEDY) அன்றோ இருக்கிறது?

கண்ணீரிலிருந்துதான் பிறப்பது விடுதலையென்றால் — நாம் கொட்டுகிற இரத்தத்திலிருந்துதான் பிறப்பது விடுதலையென்றால்—நாம் இன்று வடிக்கின்ற கண்ணீரும், கொட்டிய இரத்தமும், கொடுத்த உயிர்ப்பலியும், தமிழ்ஈழ விடுதலையை நோக்கி நம்மை இட்டுச் செல்லும் உந்துசக்தியாக— வருங்கால சுதந்திரத்தமிழ் ஈழத்தின் அடிஅத்திவாரமாகவே பயன்பட்டிருக்கிறது என்கிற அந்த ஒரேயொரு ஆறுதலே இன்றையதினம் நமக்கு கிடைக்கிறது.

வியட்னாமிய மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தங்கள் சுதந்திரத்துக்காக தலைவர் ஹோசிமின் தலைமையில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சளைக்காது போராடினார்கள்; அந்த முப்பது ஆண்டுகாலமும் வியட்னாமிய மக்கள் அனுபவித்த கொடுமைகள், துன்பங்கள், தந்த உயிர்ப்பலிகள், விளைந்த சேதங்கள் எராளம் எராளம்; திடீர் திடீரென்று நடைபெறும் குண்டுவீச்சுக்களுக்கு மத்தியிலேதான் அவர்கள் குடும்பம் நடத்தினார்கள் —துப்பாக்கி வேட்டுக்களுக்கு மத்தியிலேதான் அவர்கள் குழந்தைகளுக்கு தாலாட்டுப்பாடினார்கள் — ஒருபுறம் எதிரியின் குண்டு வீச்சினால் பிணமாகிக்கிடக்கும் வியட்னாமிய மக்கள் காட்சிதருவார்கள் — மறுபுறம் வியட்னாமியன் ஒருவனின் இல்லத்தில் திருமணமும் நடைபெறும்! எழில் நிறைந்த வியட்னாமிய நாட்டின் எத்தனையோ உயர்ந்த கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. எதிரிப்படைகளால் —இப்படி எண்ணமுடியாத துன்பத்துக்கு மத்தியில்தான் அவர்கள் சுதந்திரத்திற்கான தமது தியாக வேள்வியை நடத்தினார்கள் — இறுதியில் வெற்றியும் ஈட்டினார்கள்! இது வரலாறு!

வங்கதேச மக்கள் ஒருகோடிப்பேர் அகதிகளாக்கப்பட்டு— 30 இலட்சம் பேர் உயிரைப்பலிதந்து — பல இலட்சம் வங்க மாதர்கள் கற்பை இழந்து — வங்கத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டிய சங்கதி அண்மைக்கால வரலாறு!

நண்பா, துன்பத்தை துன்பம் என்று கருதி அதற்காக துன்பப்படுவதும் — கண்ணீர் வடிப்பதும், அரற்றுவதும் அழுதுபுலம்புவதும் ஒரு நிலையை அடையும் வரைக்கும்தான்; அதற்குப் பின் வடிப்பதற்கு கண்ணீர் இருக்காது—உள்ளம் உரம் பெற்றிடும்; துன்பமே வாழ்க்கையாகிடும் — அதுவே இயல்பாகிடும் — சுதந்திரப்பாதையில் செல்கின்ற மக்களுக்கு இந்த மனோநிலை ஏற்படவேண்டும்; ஏற்பட்டே தீரும்!

**ஈழத்தமிழினம் — இன்று சுதந்திரப் போராட்டத்தின் முதலாவது படியிலே அடியெடுத்து வைத்துள்ளது – அதாவது சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைத்திடுவது; அதற்காகப் போராடுவது என்ற உறுதியான முடிவை மட்டுமே எடுத்துள்ளது — இரண்டாவது அடியில் — அதாவது போராட்ட நடவடிக்கையில் தமிழினத்தை வழிநடத்திச் செல்லும கூட்டணி இன்னும் காலடி எடுத்து வைக்கவில்லை — ஆனால் அதற்குள்ளாக தமிழ் மக்களை அடித்து உதைத்து — பயங்கரமாக படுகொலை செய்து — சொத்துக்களை சூறையாடி தமிழர் கடைகளையும், வீடுகளையும் கொளுத்தி வெறியாட்டம் நிகழ்த்துகின்றனர் சிங்கள இனவெறியர்கள்! ஆம் — தமிழினத்தின் சுதந்திரக் கோரிக்கையை பயமுறுத்துவதன் மூலமும், பலாத்காரத்தை நமது மக்களுக்கு எதிராக ஏவி விடுவதன் மூலமும் முளையிலேயே கிள்ளியெறிந்துவிடலாம் என்று பகற்கனவு காண்கின்றனர் சிங்கள ஏகாதிபத்திய இனவெறியர்கள்!**

நண்பா, தமிழினம் அடிபட்டு, உதைபட்டு, வதைபட்டு வீழ்ந்துகிடக்கும் இத் தருணமாகப் பார்த்து — தமிழ்மக்களை பலவீனப் படுத்திடவும், அவர்களின் உறுதியையும், ஒற்றுமையையும் குலைத்திடவும் — விடுதலை இலட்சியத்திலிருந்து தமிழ் சமுதாயத்தை விலகியோடச்செய்து அடிமைப் படுகுழியில் தள்ளி வீழ்த்திடவும் — சிங்கள ஏகாதிபத்திய அரசியல் தலைவர்களும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் செல்லப் பிள்ளைகளாக கொழும்பில் சொகுசு வாழ்க்கை நடத்த விரும்புவோரும் இன்றையதினம் படாத பாடு பட்டுவருகிறார்கள்!

**முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஈழத்தமிழர்களின் ஒற்றுமையணியாக — வாராது வந்துற்ற மாமணியாக — உருவாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி மீது பழிபோட்டு, கூட்டணிக்கு எதிராக நொந்து போயிருக்கும தமிழ் மக்களின் உணர்வுகளை திருப்பிவிட்டு — கூட்டணியை பலவீனப்படுத்தவும் — மூதறிஞர் தந்தை செல்வாவும், அமரர் பொன்னாவும், அமரர் திருச்செல்வமும் நமக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கும் 'தமிழ் ஈழம்' என்ற மாற்ற முடியாத இறுதி இலட்சியத்திலிருந்து தமிழ் மக்களின் கவனத்தை திசை திருப்பவும் சிங்கள ஏகாதிபத்தியமும், அதற்கு சிந்து பாடும் அடிமைகளும் சிங்களவர்கள் நடத்தும், ஆங்கில, தமிழ் நாளேடுகளும் நாளும் முயன்றுகொண்டிருக்கின்றன!**

தமிழர்களுக்கு கொடுமைக்குமேல் கொடுமை புரிந்து அவர்களைக் கொன்று குவித்த பின்னர் — சிங்களவர்களிடையேயுள்ள அரசியல்வாதிகளுக்கும் பௌத்த பிக்குகளுக்கும் இப்போது தமிழ் மக்கள்மீது 'திடீர் காருண்யம்' பிறந்திருக்கிறது— தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்திடவேண்டிய அவசியம் பற்றியும், சகோதரத்துவம், தேசிய ஒற்றுமை பற்றியும் மாநாடுகள் கூட்டி வானளாவப் பேசுகிறார்கள் — அவற்றைப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன!

இவர்கள் பேசுகிற தேசிய ஒற்றுமை, இன ஐக்கியம் என்பனவற்றின் அர்த்தம் என்ன என்பது எமக்குத் தெரியும்! தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தை—அவர்களது தாயக பாரம்பரிய உரிமையை — மொழி, கலை, கலாசார பாரம்பரிய தனித்துவத்தை—அங்கீகரித்து ஏற்றுக்கொள்வது தான் இவர்கள் கூறும் தேசிய ஐக்கியத்தின் அடிப்படையென்றால் — அத்தகைய தேசிய ஐக்கியத்துக்கு நாம் எப்போதும் முரண்பட்டவர்கள் அல்ல!

ஆனால்—பாம்பு தவளையுடன் தேசிய ஐக்கியம் பேசுவது எப்படியோ—பருந்து கோழிக்குஞ்சுடன் தேசிய ஐக்கியம் பேசுவது எப்படியோ — அதே போல சிங்கள ஏகாதிபத்திய வாதிகளும் பௌத்த பிக்குகளும் இன்று தமிழ் மக்களை தேசிய ஐக்கியத்துக்கு அழைக்கிறார்கள்!

## அரசியல் மேடை

பாம்பின் 'தேசிய ஐக்கிய' அழைப்புக்குத் தவளை இணங்கினால் எந்த முடிவு தவளைக்கு ஏற்படுமோ—பருந்தின் "தேசிய ஐக்கியம்" கோழிக்குஞ்சுடன் எவ்வாறு இருக்க முடியுமோ — அதே போலவே சிங்கள ஏகாதிபத்திய அரசியல் தலைவர்களும், பௌத்த பிக்குகளும் கூறும் தேசிய ஐக்கியம் இருக்கும் என்பதை நாம் அறிவோம்!

தமிழர்கள் தங்கள் தமிழ் ஈழ நாட்டையும், மொழியையும் பண்பாட்டையும் மதத்தையும் முற்றாக இழந்து, சிங்கள பௌத்தத்துடன் காலப்போக்கில் இரண்டறச் சங்கமமாகிவிட வேண்டும்; வடக்கிலிருந்து தெற்கு வரை — ஒரே இலங்கை — சிங்கள பௌத்த இலங்கையே — இருக்கவேண்டுமென்பது தான் சிங்களவர்களினதும், பௌத்த பிக்குகளினதும் ஒரே எண்ணமும் ஆசையுமாகும்! இதைத்தான் அவர்கள் வெவ்வேறு சொற்களில் கூறுகிறார்கள்!

இந்த ஆசைக்கு—ஈழத் தமிழினம் கிஞ்சிற்றும் இணங்க மறுக்கிறது — தன்னுடைய தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும் நிலைநிறுத்திக்கொள்ள விரும்புகிறது — தன்னுடைய நாட்டைத் தானே ஆள விரும்புகிறது — தன்னுடைய மொழியையும், பண்பாட்டையும், மதங்களையும் தனியாகப் பேணிப் பாதுகாத்துக்கொள்ள விரும்புகிறது — இந்த உரிமைகளுக்காகப் போராடி வருகிறது!

தமிழினத்தின் இந்தத் தனித்துவப் போக்குத்தான் சிங்கள வெறியர்களுக்கு வேம்பாகக் கசக்கிறது—தங்கள் எண்ணம் நிறைவேற முடியாதபடி தமிழர்கள் விழிப்புடன் இருக்கிறார்களே என்று எண்ணும்போது அவர்களுக்கு ஆத்திரமேற்படுகிறது - எனவே ஹிட்லர் செய்ய எண்ணியது போலவாவது தமிழர்களைக் கொன்று குவிப்பதன் மூலம் தமிழினப் பிரச்சினையைத் தீர்த்துக்கட்டி விடலாமா என்று அடிக்கடி அந்த வழியிலும் முயற்சித்துப் பார்க்கிறார்கள்!

**இதுதான் இலங்கையின் இனப் பிரச்சினை இதுவரை தீராததற்கு ஒரே காரணமாகும். சிங்கள இன வெறியர்களின் இந்த மனப்போக்கினால் தான் இலங்கை எரிமலையாகிக் குமுறுகிறது!**

"தமிழர் பிரச்சினை" என்று சிங்களவர்கள் பேசுவதிலிருந்தே — தமிழர்களை சிங்களவர்கள் தமக்கு ஒரு "பிரச்சினை" யாக கருதுகிறார்களே தவிர—தமிழர்களை தங்கள் சகோதரர்களாக— ஒரே நாட்டினராக கருதுவார்களானால்—தமிழர்களை "பிரச்சினை" க்குரியவர்களாகவே நினைக்க மாட்டார்கள்! "துட்டகைமுனு, பராக்கிரமவாகு, வாலகம்பா ஆகிய சிங்கள மன்னர்களின் காலத்திலிருந்தே தமிழர்கள் ஒரு பிரச்சினையாக இருந்துவந்திருக்கிறார்கள்" என்று சிங்கள பௌத்தபிக்கு ஒருவர் அண்மையில் பேசியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழர்களாகிய நாம் சிங்களவர்களாகிய உங்களுக்கு பிரச்சினையாக இருந்திட விரும்பவில்லை; சமாதானவாக எங்களை பிரிந்துபோக விட்டுவிடுங்கள்! நாம் எங்கள் வழியே எமது அலுவல்களை பார்த்துக் கொள்கிறோம்! என்று நாம்கூறினால் அதற்கும் எங்களை விட்டுவிட அவர்களுக்கு மனமில்லை; எம்மீது ஆட்சி நடத்தி எம்மை அழித்தொழிக்கவே ஆணவம் பிடித்த அவர்கள் விரும்புகிறார்கள்!

சிங்கள இனவெறியர்களின் எவ்விதமான அச்சுறுத்தலுக்கும், கொலைவெறிக்கும், பயந்துவிடாமல்-பணிந்து விடாமல்-இன்னும் எத்தனை தியாகம் செய்திட நேர்ந்திடினும் எத்தனை படுகொலைகளைச் சந்திக்கநேர்ந்திடினும்-தங்கள் தனித்துவத்தையும், தாயகத்தின் சுதந்திரத்தையும், மீட்டே தீருவது என்பதில் ஈழத் தமிழ்மக்கள் உறுதியாக நிற்கிறார்கள். எம்மைப் பயமுறுத்திப் பணியவைக்க முடியாது என்று அன்று 1924ம் ஆண்டு முழங்கினார் சேர் பொன் அருணாசலம்—'தமிழ் லீக்' தொடக்க விழாவில்! அவரது வழியிலே — தந்தை செல்வாவின் அணியிலே அவர் தந்து விட்டுச்சென்ற கூட்டணி இயக்கத்தின் தலைமையில் தமிழ் ஈழ சுதந்திரத்துக்காகப் போராடும் ஈழத் தமிழர்களையும் யாரும் பயமுறுத்தி, மிரட்டி, படுகொலை செய்து இராணுவத்தையும், பொலீசையும் ஏவி அடக்குமுறையாட்சி நடத்தி, கொடுமை பல புரிந்து அடிமைத்தனத்தை ஏற்க வைத்துவிட முடியாதென்பதை நாம் உறுதியுடன் கூறி வைப்போம்!

நமது நியாயமான கோரிக்கைகள் சிங்களவர்களுக்குக் கோபத்தை மூட்டுகிறதாம்! உண்மையிலே—சிங்களவர்களின் இனவெறி பிடித்த அநியாயக் கோஷங்கள் நமக்கு அன்றோ ஆத்திரத்தை மூட்டவேண்டும்? மூதறிஞர் தந்தை செல்வா அன்றொரு நாள் 1960ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்திலே பேசும்போது கூறிய வைரவரிகளே எனக்கு இப்போது நினைவுக்கு வந்திடுகிறது,

**"தமிழர்களின் கோரிக்கைகள் சிங்களவர்களுக்கு ஆத்திரமூட்டுகிறதாம்; அதனால் நாம் பேசக்கூடாதாம். இப்படி புத்திமதி கூறுகிறார்கள் சிலர்; நாளை தமிழன் மூச்சுவிடுவதுகூட சிங்களவர்களுக்கு ஆத்திரமூட்டலாம்; அதற்காக தமிழன் மூச்சு விடக்கூடாதென்றும் சிலர் சொல்வார்கள் — அதைக்கேட்டு சிங்களவர்களுக்கு கோபம் வருமென்பதற்காக நாம் மூச்சே விடாமல் இறந்துபோக வேண்டுமா?"**

இது தந்தை செல்வா அவர்கள்—தமிழரசுக் கட்சி இணைப்பாட்சி கோரிய காலத்தில் பேசியதாகும்! ஆம்—தமிழன் இணைப்பாட்சி கேட்டபோதும் சரி—மாவட்ட சபை, பிரதேச சபைகளுக்கு ஒப்பந்தம் செய்த போதும் சரி இப்போது தமிழ் ஈழம் கோருகின்ற போதும் சரி—தமிழன் எதைக்கேட்டாலும் சிங்களவனுக்கு கோபம் வருகிறது — ஆத்திரம் மூளுகிறது — தமிழர்களை அடித்துத் தள்ளுகிறார்கள்; கொன்று குவிக்கிறார்கள்—

ஆம்—தமிழன் உரிமை எதுவும் வாய் திறந்து கேட்கக்கூடாது; சிங்களவன் தானாக மனமிரங்கிப் போடும் பிச்சையை நக்கிக்கொண்டு நாய் வாழ்வு வாழவேண்டுமென்பதே சிங்களவனின் எண்ணம்; இந்த ஈனநிலையை என் தமிழன் ஏற்றிடுவானா?

விடுதலைக்குப் போராடி வெற்றி குவிப்போம்—இன்றேல் அதிலேயே அழிந்துபடுவோம் என்பதே ஈழத்தமிழனின் இதய கீதமாகும்!

உன் அன்புத் தோழன்

**கோவை மகேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரத்துக்கு காரணம் தமிழ்த் தலைவர்கள் அல்ல!

## சிங்கள அரசியல்வாதிகளின் பேச்சே கலவரத்தைத் தூண்டியது

## சிங்களப் பெண்மணியே சொல்கிறார்!

நாட்டில் ஏற்பட்ட சிங்கள இனவெறிக்கும் சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்கியதற்கும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் பேச்சுக்களும் தனிநாடு கோரிக்கையும் தான் காரணம் என்று குற்றம் சாட்டியும் — தமிழர் கூட்டணி நாடுமுழுவதுமுள்ள தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லையென்றும், சிங்களவர்களுடன் வாழ்வதுதான் தமது இலட்சியமென்றும் கொழும்பு கறுவாக்காட்டைச் சேர்ந்த முன்னாள் அழகுராணியான 'டமில்' பெண்மணியொருவர் பெயரில் 'சன்', 'டெயிலிமிரர்' போன்ற ஆங்கிலப்பத்திரிகைகள் அளவுக்கதிக முக்கியத்துவம் கொடுத்து ஒரு கடிதத்தைப் பிரசுரித்திருந்தன. குறித்த கடிதத்திற்குப் பதிலளித்து 492 பேராதனை வீதி, கண்டியிலிருந்து திருமதி எவ்லின் ஜெயசிங்கா என்ற சிங்களப்பெண்மணி பின்வரும் கடிதத்தை ஆங்கிலத்தில் சுதந்திரனுக்கு அனுப்பிவைத்துள்ளார். அதை அப்படியே இங்கு தருகிறோம்—

— ஆர்

31-8-77 'சன்' பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த திருமதி செல்வதி முத்துக்கிருஷ்ணாவின் கட்டுரையைப் படித்து ஆச்சரியமடைந்த சிங்களவர்களில் நானும் ஒருவள். இது பற்றி எனது கருத்துக்களை 'சன்' பத்திரிகைக்கு எழுதுவதில் எதுவித பிரயோசனமும் இல்லை ஏனெனில் 'சன்' பத்திரிகையில் எனது கருத்துக்கள் வெளிவரும் என்று எதிர்பாக்க முடியாது. 'சன்'பத்திரிகை சிங்கள மக்களை தூண்டிவிடும் பேராசிரியர் எவ். ஆர். ஜெயசூரிய போன்றவர்களின் கட்டுரைகளை வெளியிட்டுவந்தது— இப்போது தமிழ்தலைவர்களை கண்டிப்பதற்கு திருமதி. செல்வதி முத்துக்கிருஷ்ணா போன்றவர்களை தேடிக்கொண்டிருக்கிறது. என்னுடைய இந்தக் கடிதத்தை உங்கள் 'சுதந்திரன்'பத்திரிகையில் பிரசுரிப்பது மட்டுமன்றி அதன் பிரதிகளை கௌரவ பிரதமர், திருவாளர்கள், காரியவாசம், பேர்சிசமரவீர மற்றும் அமைச்சர்கள் ஆகியோருக்கும் கறுவாக்காட்டில் செல்லமுத்துக்கள், பரராசசிங்கங்களுடன் திருமதி செல்வதி முத்துக்கிருஷ்ணாவை உங்களால் கண்டுபிடிக்க முடியுமானால் அவருக்கும் அனுப்பிவையுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களின் பேச்சுக்கள் தான் தமிழ்மக்கள் அடியும் உதையும் வாங்குவதற்கு காரணம் என்ற முடிவுக்கு திருமதி செல்வதி வந்துள்ளது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. கூட்டணித் தலைவர்களுடைய குறிப்பிட்ட பேச்சுக்கள் எவை என்பதை அவர் வெளியிடவில்லை. அவவுக்கு அது தெரியாதுபோலும். ஒரு தனித் தமிழ் ஈழம் அமைக்கவேண்டுமென்ற தமிழ்த் தலைவர்களின் அழைப்புத்தான் குழப்பத்துக்குக் காரணமா?

தமிழ் ஈழக் கோரிக்கை 1955ம்ஆண்டிலிருந்தே இருந்து வருகிறது. திரு. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் என்ற கூச்சலைக் கிளப்பிய காலத்திலிருந்து திரு சி. சுந்தரலிங்கம் தனிநாடு கோரிக்கையை முன்வைத்துவருகிறார். முன்னாள் ஊர்காவற்றுறை பா. உ. திரு. வ. நவரத்தினம் 1968ம் ஆண்டிலிருந்து கடுமையான வார்த்தைகளில் தனிநாடு கோரிக்கையை எழுப்பி வருகிறார். இது சம்பந்தமாக கொழும்பில் அவர் பல கூட்டங்களையும் நடத்தியுள்ளார். 1974ம் ஆண்டுமுதல் காலஞ்சென்ற திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் தலைமையில் த. வி. கூட்டணி தனிநாடு கோரிக்கையை முன்வைத்து வருகிறது. ஆகவே அதனால்தான் இப்போது குழப்பம் ஏற்பட்டது என்று கூற முடியாது.

நெப்போலியன் பற்றியும் திருகோணமலைபற்றியும் குறிப்பிட்டது தான் குழப்பத்திற்குக் காரணமா?

தமிழர் வீடுகளை எரித்தவர்களுக்கும், தமிழர் வீடுகளைக் கொள்ளையடித்தவர்களுக்கும், ஐரோப்பிய சரித்திரம் தெரிந்திருக்கும் என்று கூறும் அளவுக்கு திருமதி செல்வதி ஒரு முட்டாளாக இருப்பார் என்று நினைக்கவில்லை.

தன்னை ஒரு யாழ்ப்பாணப் பெண் என்றும், சிங்கள மக்களுடன் இணைந்தும் பிணைந்தும் நீண்டகாலம் வாழ்ந்தவர் என்றும் கூறிக்கொள்ளும் திருமதி செல்வதிக்கு நான் ஒரு சிங்களபெண் என்ற முறையில் புத்திமதியாக கூறவிரும்புவது இதுதான். மடைத்தனமாக உங்கள் இனத்தின் கருங்காலியாக மாறுதீர்கள். தங்கள் இனத்திற்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருக்க முடியாத தமிழர்களால் சிங்கள மக்களுடன் நிரந்தர சமாதானமாக வாழ்முடியாது. குமாரசூரியருக்கு நடந்த கதியை தயவுசெய்து நினைத்துப் பாருங்கள். குமாரசூரியவை சிங்களவராகிய நாங்கள் எங்கள் இதயத்தில் வைத்துப் போற்றுவதாக திருமதி செல்வதி கருதுகிறாரா?

சிங்கள மக்களிடையேஉள்ள கடைந்தெடுத்த இன வெறியன் கூட தங்கள் இலட்சியத்துக்குரிய விசுவாசத்துடன் உழைக்கும் திரு. செல்வநாயகம் போன்ற தமிழ் தலைவர்களையே எப்பொழுதும் மரியாதை செய்வார்கள். இந்த நாடு எப்பொழுதாவது இன்னொரு நாட்டுடன் கடுமையாக மோதவேண்டிய நிலை ஏற்படுமானால் சிங்களவர்கள் நிச்சயமாக தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களின் ஆதரவையே நம்பியிருக்க முடியும் தென்னிலங்கையில் சிங்களவர்கள் மீது கொண்ட அன்பினாலன்றி அவர்களை சுரண்டுவதற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் திருமதி செல்வதிகளையும் செல்ல முத்துக்களையும் பரராசசிங்கங்களையும் இந்த நாடு நம்புமானால் அது தன்னைத் தானே அழித்துக் கொள்வதாக முடியும்.

முடிவாக திருமதி செல்வதியையும், ஏனையோரையும் நான் கோருவது என்னவென்றால் பின்வரும் விபரங்கள் இனவெறிக்குக் காரணமாக அல்லது இனவெறியைத் தூண்டுவதாக அமைந்துள்ளனவா, அல்லவா என்பதனை ஆராயுங்கள்.

(1) 1977 ஆகஸ்ட் 11ம், 12ம் திகதிகளில் 'சன்' பத்திரிகையில்வெளிவந்த பேராசிரியர் எப். ஆர். ஜெயசூரியாவின் கட்டுரைகள்.

(2) தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் சிலரது தேர்தல் காலத்துக்கு முந்தியபேச்சுக்கள்.

(3) சிங்களத் தொகுதிகளில் தமிழர்கள் முழுக்க முழுக்க ஐ. தே.க. வை ஆதரித்து வாக்களித்தது.

(4) 18 - 8 - 77 வானொலியில் ஒலிபரப்பப் பட்ட தமிழர்களும் சிங்களவர்களும் கொலைசெய்யப்பட்ட விபரங்களடங்கிய பிரதமரின் அறிக்கை.

(5) தேசியப் பேரவையில் அமைச்சர் காரியவாசமும், பேசி சமரவீராவும் நிகழ்த்திய உரை.

உங்கள் தனிநாடு கோரிக்கையை நான் ஆதரிப்பவளல்ல ஆனால் தமிழ் மக்களின் உயிருக்கும், உடமைக்கும் ஏற்படுத்தப்பட்ட பயங்கரமான சேதங்களையும் தமிழ் யுவதிகள் ஏராளமானோர் கற்பழிக்கப்பட்டதையும் நேரடியாகக் கண்டபின்னர் இந்த நாட்டில் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் வாழக்கூடிய இடங்களை நாடிச்செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதை உணருகிறேன் பிரதமரும், பிரேமதாசாவும் எவ்வளவுதான் அந்தரங்க சுத்தியாக தமிழ் மக்களுக்கு உதவ முன்வந்தாலும் காலத்துக்கு காலம் தென்னிலங்கையில் எழும் இனவெறிக் கொடுமையிலிருந்து தமிழ் மக்களை அவர்களால் காப்பாற்றி விட முடியாது.

உங்கள் அன்புள்ள
திருமதி எவ்லின் ஜெயசிங்கா
Mrs. Evelyn Jayasinghe

492, பேராதனை வீதி
கண்டி.
3-9-1077.

---

## "கண தெய்யோ நாண்ட கியா"

### சிங்கள வெறியர்களின் ஈனத்தனம்!

திருகோணமலையில் நடைபெற்ற சிங்கள இனவெறியாட்டம் பற்றிய செய்திகள் சுதந்திரனுக்கு கிடைத்துள்ளன. திருகோணமலை மாவட்டம் முழுவதிலுமாக 25 தமிழர்கள் வரை உயிரிழந்திருப்பதாக தெரிய வருகிறது!

சேருவில தொகுதிக்குள்ளிருக்கும் கந்தளாய்ப் பகுதியில் தான் மிக மோசமாக சிங்கள இன வெறியாளர்கள் தமிழர்களைக் கொன்று குவித்ததாக அறியப்படுகிறது.

கந்தளாய்ப் பகுதியில் தமிழர்களுக்கு எதிராக இன வெறிச் செயல்களில் ஈடுபட்ட சுமார் 20 சிங்களவர்களின் பெயர்களை தாம் பொலிசாருக்கு கொடுத்ததாகவும் எதுவித நடவடிக்கையும் அவர்கள் மீது எடுக்கப்படவில்லையென்றும் கந்தளாயிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழ் இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள கோணேசர் கோட்டைக்குச் செல்லும் முகப்பில் இருந்த பிள்ளையார் கோவிலிலிருந்த பிள்ளையார் விக்கிரகம் சிங்கள வெறியர்களால் அடியோடு பெயர்த்தெடுத்து கடலுக்குள் வீசியெறியப் பட்டுவிட்டதாகவும் — அந்த இடத்தில் சிங்களத்தில் "கண தெய்யோ — நாண்ட கியா" (பிள்ளையார் குளிக்கப் போய்விட்டார்) என்று எழுதப்பட்டிருப்பதாகவும் அந்த இளைஞர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலையிலிருந்து 1½ மைல் தூரத்திலுள்ள 'மக்கோ' என்னும் கிராமத்திலுள்ள கத்தோலிக்க திருத்தலமான அன்னை வேளாங்கண்ணி மாதா கோவிலும், சிங்கள வெறியர்களினால் உடைத்தெறியப்பட்டுள்ளது

பாலையூற்றிலுள்ள பிள்ளையார் கோவிலும் அடித்து உடைக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலையில், தமிழர் விடுதலைக் கூட்டணி தொகுதிக் கிளைச் செயலாளர் திரு. வீர. சுப்பிரமணியத்துக்குச் சொந்தமான உணவு விடுதி எரிக்கப்பட்டுள்ளது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரமும் இறைமையும்கொண்ட தமிழ் ஈழ இராச்சியம் இலங்கையில் இருந்ததே கிடையாதாம்!

''யூ. என். பி. போட்டியிட்ட தொகுதிகளில் எல்லாம் யூ. என். பி. க்கு நூற்றுக்கு நூறு வீதமான தமிழர்கள் வாக்களித் திருக்கிறார்கள்: எனவே தமிழர்களுக்காக பேச யூ. என். பி. க்கு உரிமையுண்டு: ஒவ்வொரு முறையும் இப்பேரவையில் தமிழ்ஈழம் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி பா- உ. க்கள் சிங்கம் போல முழங்கும்போது சிங்கள நாட்டில் வாழும்தமிழர்கள் பயத்தினால் நடுங்குகிறார்கள். துட்டகைமுனு இறந்துவிட்டதாக தமிழ் பா. உ. க்கள் நினைத்துவிடக் கூடாது. துட்டகைமுனு ஒவ்வொரு சிங்களவனுடைய இதயத்திலும் வாழ்கிறான். உங்களது பேச்சினைக் கேட்டால் துட்டகைமுனுக்கள் செயலில் ஈடுபட ஆரம்பித்து விடுவார்கள். சிங்கள இளைஞர்களும் இன உணர்ச்சி பெற்றுவிட்டார்கள்!''

—அகலவத்தை யூ. என். பி. பா. உ. திரு. மெரில் காரியவாசம் (22-8-77)

[இப்பேச்சின் பின்னர் அகலவத்தையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த இ. போ. ச. பேருந்துகளில் '' துட்டகைமுனுவாக மாறுவோம்— தமிழர்களைக் கொல்லுவோம் '' என்ற வாசகங்கள் எழுதப்பட்டுக் காணப்பட்டன.]

✲ ✲

''தனித்தமிழ்ஈழக்கோரிக்கை கைவிடப்படும்வரை இந்த நாட்டில் தேசிய ஐக்கியமும் ஏற்படமுடியாது. தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சிங்களமக்களுடன் இரண்டறக் கலந்து விட்டார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரமாட்டார்கள்.

—கே. டி. எம். சி. பண்டார (யூ. என். பி. - அனுராதபுரம் மேற்கு (22-8-77)

✲ ✲

''பண்டார நாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து யூ. என். பி. கண்டிக்கு யாத்திரை செய்தது பகிடிக்குரிய விடயமல்ல; தனிநாடு அமைப்பதை எதிர்த்தே அந்த யாத்திரையை நடத்தினோம் யூ. என். பி. யின் எதிர்ப்பினாலேயே பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இப்போதும் தமிழ் ஈழம் பற்றிப் பேசுகிறார்கள்; ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையிலும் அவர்கள் நாட்டைப் பிரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்!''

—வெலிமடை பா. உ. பேர்சி சமரவீர (யூ. என். பி.) (22-8-77)

✲ ✲

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மீண்டும் ஐம்பதுக்கு ஐம்பது கோருகிறார்கள். இன வெறியைத் தூண்டுகிறார்கள். தமிழர்கள் இங்கு சிங்கள நாட்டில் நல்லவிதமாக கவனிக்கப்படுகிறார்கள். வடக்கில்தான் ஒருவேளை தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக உள்ளது!''

– ஜெய விக்கிரம பெரேரா —கட்டுக்கம்பல (யூ. என். பி.) (22-8-77)

✲ ✲

## தேசிய அரசபேரவையில் கேட்டவை!

'' தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர் யுவதிகளின் அங்கீகாரத்தை மட்டும் பெற்றுக் கொண்டு இங்கு வந்து தமிழ் ஈழம் கோரமுடியாது. அவர்கள் தமிழ் ஈழம் பெற வேண்டுமாயின் அதற்கு சிங்களவரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். வடக்கில் தமிழர் கூட்டணியினர் கண்டபடி வாய் திறந்தால், தெற்கில் அதன் எதிரொலி கேட்கத்தான் செய்யும்.

-பெனட் குணசேகரா (மினுவாங்கொட) யூ. என். பி. (22-8-77)

''தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தாங்கள் பேசுவதையிட்டு சிந்தித்து அளந்து பேச வேண்டும் — ஏனெனில் எமக்கும் (சிங்களவர்களுக்கும்) தீவிர உணர்வுகள் உண்டு''

—ஜினதாச வீரசிங்க (யூ. என். பி - தங்கல்ல)

✲ ✲

''வரலாற்றுப்படி தமிழ்த் தேசம் ஒன்று தனியாக இருந்ததாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூறுவது சுத்த அபத்தமானதும் உண்மைக்கு மாறானதுமாகும். விஜயனையும் குவேனியையும் மறந்துவிட்டுப் பார்த்தால் — இந்தியாவிலிருந்து பௌத்தம் இங்கு வந்ததே பதிவு செய்யப்பட்டிருக்கும் முதலாவது வரலாற்று நிகழ்ச்சியாகும். இந்த உண்மையை திராவிட வரலாற்றாசிரியர்களோ— சிங்கள வரலாற்றாசிரியர்களோ மறுக்க முடியாது.

''15ம் நூற்றாண்டில் வடக்கில் பாவிக்கப்பட்ட நாணயங்களில் எல்லாம் சிங்கள அரசர்களின் முத்திரையே பொறிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு நான் போயிருந்த போது இவைகளைக் கண்டேன். இவைகள் தமிழர்களால் அழிக்கப்படுவதற்கு முன் அவைகளை பாதுகாக்க பிரதமர் தகுந்த நடவடிக்கையெடுத்து தேசிய நூதனசாலையில்பத்திரப்படுத்த வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர்களுக்கு சுதந்திரமும் இறைமையும் இருந்ததாக கூறுவது வரலாற்றுக்கு மாறுபட்டதும், தவறானதுமாகும். வடக்கிலிருந்த அரசு, அனுராதபுர அரசனின் முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்களையே பாவித்திருக்கிறதென்பதற்கு ஆதாரம் உண்டு. தமிழ் இராச்சியம் இருந்ததற்கு அடையாளமாக வடக்கிலோ கிழக்கிலோ பாவிக்கப்பட்ட ஒரு நாணயத்தையாவது காட்டும்படி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சவால் விடுகிறேன்''

—கண்டி பா. உ. வும் சுகாதாரஅமைச்சருமான ஈ. எல். சேனநாயகா (23-8-77).

✲ ✲

''சிங்கள இரத்தம் ஓடுகின்ற எந்த ஒரு சிங்களவனும் தனிநாடு பிரிப்பதற்கு இடம் கொடுக்கமாட்டான் என்பதை அழுத்தம் திருத்தமாக கூட்டணியினருக்கு கூறி வைக்கிறேன்.

—கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில் மத்தியூ (23-8-77)

---

## ''என் நெஞ்சுக்கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டிய விஷயம்: ஏனெனில் நேற்று இரவிலிருந்து உங்கள் ஆட்கள்தான் தொலைபேசி பழுதடைந்து இருப்பதாக கூறிக் கொண்டிருக்கிறார்கள்.'' என்றேன். ஒருவேளை பொலீஸ் அதிபர் தமக்கு தொல்லை கொடுக்க வேண்டாமென்று அவர்களுக்கு கூறி விட்டுத் தூங்கப் போய்விட்டாரோ என்பது எனக்குத் தெரியாது. ஆனால் யாழ்ப்பாணத்தில் இவ்வளவு தூரம் நிலைமை மோசமடைந்ததற்கு காரணம் யாழ்ப்பாணம் பொலீஸ் உயர் அதிகாரிகள் தமது கடமையிலிருந்து முழுமையாகத் தவறி விட்டதுதான் என்பதை கூற வேண்டியது எனது கடமையாகும்.

நான் கூறிய பின்னர்தான், யாழ் பொலீஸ் அதிபருக்கு யாழ்ப்பாணத்தில் முதல் நாள் இரவும் மறுநாள் இவ்வளவும் நடந்ததென்பது முதன் முதலாகத் தெரியவந்திருக்கிறது. நான் வட்டுக்கோட்டையிலிருந்து பேசினேன்; ஆனால் அசம்பாவிதங்கள் நடைபெற்ற இடத்திலிருந்து கால் மைல் தூரத்திலிருக்கும் மனிதருக்கு அதுபற்றி எதுவும் தெரியாமலிருந்திருக்கிறது — இப்படிப்பட்ட மனிதர்தான் பொலீசுக்கு பொறுப்பாக அங்கே கருதப்படுகிறார்!

காலையிலும் சிலசம்பவங்கள் இடம் பெற்றன. பொலிசார் எனக்கு கூறியதிலிருந்து — யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு தொழிலுக்கு வந்த பொதுமக்கள்-தமது கடைகள் உடைந்து கிடப்பதையும் பெயர்ப்பலகைகள் உடைந்து கிடப்பதையும் கண்டு ஆத்திரமடைந்தனர். அவர்களில் சிலர் கடமையாற்றச் சென்ற ஒரு பொலிஸ்காரரைத் தாக்கி அவரது துவக்கையும் முறித்தனர்.

இச்சமயத்தில் ஏ. எஸ் பி. ஒருவர் அங்கு சென்றிருக்கிறார். ஏ. எஸ். பியின் ஜீப்பும் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டதாகவும் அதிலிருந்து அவர் தப்பிச் சென்றதாகவும் நான் அறிந்தேன். நிலைமை மோசமடைந்து வருவதாக யாழ். அரசாங்க அதிபர் ஏ. எஸ். பி. யிடம் கூறியும் அவர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை; அரசாங்க அதிபருடன் காலை 5-30 மணிக்கு நாம் தொடர்பு கொண்டு நிலைமை மோசமடைவதாகவும், பொலீஸ் அதிபருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை யெடுக்குமாறும், பொலீஸ் அதிபருடன் எம்மால் தொடர்பு கொள்ள முடியவில்லையென்றும் கூறினோம்.

அரசாங்க அதிபர், பொலீஸ் அதிபருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கையெடுக்குமாறு கேட்டுக் கொண்ட போதிலும், அவர் அதைப் பொருட்படுத்தவில்லை—காலை 8மணிக்கு அவர் யாழ். பெரிய கடைக்குச் சென்று பார்த்துவிட்டு, அங்கிருந்து பொலீஸ் நிலையம் சென்றார். அங்கு சென்றதும், எதுவித கட்டுப்பாடின்றி யாழ். மாநகரத்தில் பொலீசாரை அவிழ்த்து விட்டார்!

பொலிசார் ஜீப்புகளிலும், ஏறிக்கொண்டு தெருவில், கடைகளில், கடைத்தெருவில், சந்தையில் காணப்பட்ட அனைவரையும் மிலேச்சத்தனமாகத் தாக்கத் தொடங்கினர். பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவர்களும் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டனர்; அவர்கள் சென்ற பைசிக்கிள்கள் அடித்து நொறுக்கப்பட்டன; பொலிசாரின் வாகனங்களின் நடமாட்டத்தைகட்டுப்படுத்துவதற்கும், பொதுமக்களை பொலிசார் தாக்குவதை தடுப்பதற்கும் பொதுமக்கள் தெருவீதிகளை தடைசெய்ததையும், தெருவீதிகளில் டயர்களை கொழுத்திப்போட்டதையும் நான் எனது கண்ணால் கண்டேன்.

நான் உடனடியாக பொலிஸ் அதிபரிடம் சென்று அவர் என்ன நடவடிக்கையெடுக்கவிருக்கிறார் என்று கேட்டேன். அவர் சொன்னார் —''எமது ஆட்கள் போயிருக்கிறார்கள் – அவர்கள் நிலைமையை சமாளிப்பார்கள்''

பொலிஸ் அதிபரும், உதவி பொலிஸ் அதிபரும் அங்கே கல்லுப்போல் உட்காந்திருக்க --வெளியே பொலீஸ்காரர்கள் யாழ்ப்பாண வீதியில் வெறியாட்டம் நடத்தினார்கள்.

நான் பொலிஸ் அதிபரின் அலுவலகத்தில் இருந்த நேரத்தில் — பொலிஸ் அதிபருக்கு ஒரு தகவல் வந்தது—இரண்டு பேர் சுடுபட்டு இறந்துவிட்டார்கள் என்பதே அது. அப்போது நான் சென்று நிலைமைகளை நேரில் பார்க்கவிரும்புவதாகத் தெரிவித்தேன். அப்போது பொலிஸ் அதிபர் என்னிடம் கூறினார் — ''நீங்கள் போனால் பொதுமக்களுக்கு இன்னும் உற்சாகம் ஏற்பட்டு விடும் — ஆகவே போகாமலிருப்பது நல்லது'' என்று ஆலோசனை கூறினார்; ஒரு வகையில் அது சரியாகவும் எனக்கு அப்போது தோன்றியது.

அதன் பின்னர் பிரதமருடன் பேசமுயன்றேன், முடியவில்லை, அதன் பின் உதவி பாதுகாப்பு அமைச்சருடன் பேசி, யாழ்ப்பாண நிலைமையை எடுத்துக் கூறினேன்; அவர், பொலிஸ்மா அதிபரும், இராணுவத் தளபதியும், பாதுகாப்பு அமைச்சு செயலாளரும் யாழ்ப்பாணம் வந்துகொண்டிருப்பதாகவும், அவர்களுக்கு விஷயத்தை விளங்கப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

அவர்கள் வருவதையறிந்ததும்—நானும், யாழ் பா. உ. யோகேஸ்வரனும், மானிப்பாய் பா. உ. தர்மலிங்கமும், யாழ் முன்னாள் மேயருமாக யாழ்ப்பாணம் சந்தைக்கட்டிடம் எரிவதாக எமக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குழப்பம் மூண்ட இடங்களைப் பார்வையிடச் சென்றோம்.

பெரும்பாலான கடைகளின் கதவுகள் எரிந்து கிடந்தன, கடைகள் உடைத்து கிடந்தன, இவையெல்லாவற்றையும் நாம் அறிந்தபோது, அவற்றை பார்வையிடச் சென்றோம்.

நாங்கள் சந்தையை அடைவதற்கு முன்னரே — உதவி பொலிஸ் அதிபரும், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் அங்கே நின்றார்கள் — அங்கு நின்ற பொலிஸ்காரர்கள் எங்கள் நெஞ்சுக்கு நேரே குறி பார்த்துக்கொண்டு துப்பாக்கியும் கையுமாக எங்களைச் சுடுவதற்கு ஓடிவந்தனர்.

—அடுத்த இதழில் முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அகதிகள் கூறும் கண்ணீர்க் கதைகள்

திஸ்ஸ என்ற ஊரிலிருந்து வந்த அகதிகளில் ஒருவரான வள்ளியம்மை என்பவர் கூறியது:-

''நாம் சுமார் 10, 15 குடும்பங்கள் ஒன்றாகக் குடியிருக்கிறோம். சம்பவம் நடந்த தினம் குழப்பம் நடப்பதை அறிந்து நாம் வீட்டிலிருந்த பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வேளியேறியதும் எமது வீட்டைத் தீயிட்டு விட்டார்கள். அப்போது வழியில் பொருட்களுடன் சென்ற எம்மை கொள்ளையர் மறித்த போது இராணுவத்தினர் வந்ததும் அவர்கள் ஓடிச்சென்று விட்டனர். இதற்கிடையில் சுமார் 50 பெண்களை சிங்களக் காடையர் இழுத்துச்சென்று தகாத முறையில் நடந்தார்கள், அதன்பின் ''அம்பலாந்தோட்டைப் பகுதியில் தமிழர்களை வெட்டி பெட்டிகளில் அடைத்து அனுப்புவதாகக் கூறினார்கள்,

எமது தாய் தந்தை இந்தியாவை சேர்ந்தவர்கள். இந்தியாவில் கொச்சி மலையாளத்தைச் சேர்ந்த எமது பெற்றோர் இங்கு வந்து சுமார் 45 வருடங்களாகிறது. நாம் உடுத்த புடவைகளுடன் தான் இங்கு வந்தோம். வேறு எந்த உடமைகளையும் எடுத்துவர முடியவில்லை. எமது பெற்றோர் அம்பலாந்தோட்டையில் இருக்கிறார்கள், அவர்களின் கதி என்ன என்பது தெரியாது.

நாம் இறக்கவேண்டி நேரிட்டாலும் திரும்பவும் அதே இடத்திற்குப் போகிற உத்தேசம் எமக்கு இல்லை. அன்றாடம் உழைத்து உண்டாலும் பயமில்லாமல் இங்கு வாழலாம்.

அனுரதபுரத்தைச் சேர்ந்த வியாபாரி ஏ. சுப்பிரமணியம் என்பவர் கூறுகிறார்:-

''நான் 15 வருடமாக அனுரதபுரத்தில் வியாபாரம் செய்து வருகிறேன். அதற்கு முன்பு கண்டியில் இருந்தேன்: எங்கள் பெற்றோர் இந்தியாவில் வேலூரைச் சேர்ந்தவர்கள். நான் பிறந்தது இலங்கையில்தான். 16ம் திகதி திங்கள் நான் கம்பளைக்கு போனேன். அதன்பின் கொழும்புக்குப் போய் புதன்கிழமை அனுரதபுரம் பஸ் எடுத்து கண்டிக்கு 11 மணிக்கு வந்தபின் அங்கிருந்து வருகையில் 2 மணிக்கு கெக்கிராவையில் தமிழர்களை அடித்தார்கள். அப்போது நான் என்னை அடிக்கவேண்டாமென மன்றாடினேன். ஏன் என்னை அடிக்கிறீர்கள் என்று கேட்ட போது ''யாழ்ப்பாணத்தில் ஆமதுறுவை அடித்தார்கள், விகாரையை உடைத்தார்கள். சிங்கள பொலிஸ் 52 பேரை சுட்டுவிட்டார்கள், சிங்களவர்களை அடித்து தென்னைமரத்தில் தொங்க விட்டுவிட்டார்கள். பின்பு 2 சிங்களப் பெண்களின் கழுத்தை வெட்டிவிட்டார்கள். இவை நடந்த பின் நாம் எப்படிச் சும்மா இருப்பது?'' என்று கேட்டு அடித்தார்கள்.

''அமிர்தலிங்கம் தமிழ் நாடு கேட்கிறார். அவர் மனைவி பொலிசாரை நாய்களென்று ஏசுறா'' உங்களுக்கு நாம் எப்படி ஆதரவுகாட்டுவது. உங்களைக் கொன்றால்தான் எமது மனம் ஆறுதல் அடையும் என்று சொல்லி அடித்தபோது சிலர் எம்மீது இரக்கப்பட்டு கலாவேவ பா. உ. வீட்டில் பஸ்சுடன் கொண்டுசென்று அடைக்கலம் அளித்தார்கள். கலாவேவ பா. உவின் வீட்டார் எமக்கு ஆறுதலளித்தார்கள்.

நாம் வவுனியாவுக்கு வந்து அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தோம். இங்குள்ள மக்கள் ஒரு குறையும் வராது பாதுகாக்கிறார்கள்.

''தமிழர்கள் பாதுகாப்பாக வாழவேண்டுமாயின் தமிழன் ஆட்சியில் இருக்க வேண்டும். நாம் தனிநாட்டுப் போராட்டத்தை ஆதரிக்கிறோம். சிங்கள மக்கள் மனிதாபிமானமற்றவர்கள். அவர்களுடன் சேர்ந்து நாம் வாழ முடியாது. நாம் எவ்வளவு நன்றி உணர்வுடன் நடந்தாலும் சிங்கள மக்கள் அதற்கு லாயக்கற்றவர்கள். நன்றியறிவு அற்றவர்கள்.

மாத்தறையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு தமிழ்ப்பெண் கூறியது:-

''எமது அம்மா அப்பா இந்தியர்கள் (தஞ்சாவூர்). நாம் இலங்கையில் பிறந்தவர்கள். எனது கணவர் கூலித் தொழில் செய்பவர். எனக்கு 5 பிள்ளைகள் உண்டு. சம்பவம் நடந்த தினம் வெளி இடங்களில் இருந்த சிங்களவர்கள் வந்து ஏதோ தமிழர்களைப் பற்றிப் புகையிரத நிலையத்தில் பேசினார்கள். எமது ஊரிலுள்ள மடத்து சாமியாரும் பயத்தினால் கேற்றை பூட்டிவிட்டு ஒளிந்துகொண்டார். இதையறிந்ததும் எமக்கு பயம் பிடித்துக் கொண்டது. நாம் புகையிரத நிலையத்திற்கு போனோம். அங்கு ''யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களை வெட்டிவிட்டார்களென்று கதைத்தார்கள்'' அதன்பின் பல சிங்களவர் வந்து தமிழர்களை துரத்தி அடித்தார்கள். எமது இல்லங்களை பெற்றோல் ஊற்றி கொழுத்தினார்கள். எனக்கு மண்டையில் அடித்து மண்டை உடைந்துவிட்டது. காலிலும் கத்தி வெட்டுக்காயம் ஏற்பட்டது. அங்குள்ள தமிழ்கோவிலையும் உடைத்து கொழுத்தினார்கள். பின்னர் அங்குள்ள விக்கிரகத்தையும் காலால் உதைத்து புரட்டி எறிந்தார்கள். அங்குள்ள நகைபோன்ற முக்கிய பொருட்களை எஸ்டேட்டில் வைத்து பங்குபோட்டார்கள். பின்னர் பொலிசார் எம்மை இராணுவத்திடம் பெறுப்புக் கொடுத்தார்கள். இராணுவத்தினர் எம்மை இங்கு சேர்த்தார்கள்.

'ஒருவருக்கு வயிற்றைக்கீறி குடலை கிழித்தார்கள்.

மற்றொருவருக்கு ஒரு கையை வெட்டி எடுத்தார்கள்.

ஒரு குழந்தைக்குப் பலர் சேர்ந்து அடித்துக் கொன்றார்கள்.

ஒரு கிழவரை மயக்கமடையும்படி பலவந்தமாக தாக்கினார்கள்.

பலரை அடித்து விழுத்தி மயக்கமடைந்ததும் ஆற்றில் தூக்கிப் போட்டார்கள்.'

இவ்வாறு தான் கண்ட காட்சிகளை அந்தப் பெண் விளக்கினாள்.

## ''ஈழத்தமிழர்கள் . . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

டார்கள் என்றசெய்தி கிடைத்தவுடன் தி. மு. கழகம் அதனை வன்மையாக கண்டித்தது. எனவே இலங்கையில், மாத்திரமல்ல. உலகத்திலே எந்தக் கோடியில் தமிழனுக்கு ஒரு இன்னல் வந்தாலும் நாம் அதைச் சகித்துக் கொண்டிருக்கமாட்டோம். அதே நேரத்தில் மனிதாபிமான உணர்ச்சியோடும் நாம் நம்முடைய பணியை ஆற்றியிருக்கிறோம். மனிதாபிமான உணர்ச்சி நமக்கு இருந்த காரணத்தினால் தான் பாகிஸ்தானில் கிளர்ச்சி ஏற்பட்டபோது, இந்திய பேரரசு போர்க்கோலம் கொண்ட போது, அதற்கு துணையாக இந்தியாவிலேயே முதன் முதலாக ஆறு கோடி ருபாய் அளவிற்கு யுத்த நிதியை தமிழக அரசின் சார்பில் நாம் வசூலித்து தந்தோம். ஆகவே யாரும் இலங்கையில் இருக்கிற தமிழர்களுக்காக மாத்திரம் வாதாடுகிறோம் என்று குறை சொல்ல முடியாது. மனித சமுதாயத்தில் எங்கே யார் பாதிக்கப்பட்டாலும் கண்ணீர் வடிப்பது இதயம் உள்ளவர்களின்வேலை. அப்படித்தான் நம்முடைய கண்ணீர் கொப்பளித்துக் கொண்டிருக்கிறது.

# இனக் கலவரம் அல்ல - பச்சைப் படுகொலை!

அண்மையில் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு இலங்கை நாட்டிலே மிகப் பயங்கரமான நிலை உருவாகி வருகிறது. சிங்களப் பெரும்பான்மையினரும் இலங்கைக்கு வெளியே உள்ள நல்லவர்களும் உடனடியாகச் சீரான நடவடிக்கைகளில் இறங்காவிட்டால், இலங்கை நாட்டிலே சிறுபான்மையினர் கொன்று ஒழிக்கப்பட்டு விடுவார்கள் என்றே அஞ்ச வேண்டியுள்ளது!

## இது படை எடுப்பே!

''தமிழருக்கும் எங்களுக்கும் எந்தக் கசப்பும் இல்லை'' என்று சிங்களத் தலைவர்கள் சொல்லிக் கொண்டாலும், – தமிழ் வெறுப்பு உணர்ச்சி சிங்களவர் மத்தியிலே கடுமையாக ஊடுருவி இருப்பதாகவே தோன்றுகிறது. ''தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவே நாங்கள் விரும்புகிறோம்'' என்று சிறீலங்கா அரசு சொன்னாலும், – தமிழர்களைத் தங்கள் பிடியினின்று விட்டுவிடக் கூடாது என்பதிலேயே சிங்களத் தேசியம் கண்ணும் கருத்துமாக இருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் யாரோ சிலருக்கும் போலீஸ்காரர்களுக்கும் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் மோதல், சிங்களப் பகுதிகளில் தமிழர்களுக்கு எதிரான தாக்குதலாக வெடித்துள்ளது. அப்படி என்றால் என்ன பொருள்? அரசாங்கத்தையும், அதன் போலீசையும் அதன் ராணுவத்தையும் மீறிக்கொண்டு சிங்கள வெறியர்கள் தங்கள் தமிழ் எதிர்ப்பைக் காட்டச் சமயம் பார்த்து இருக்கிறார்கள் என்பதுதானே பொருள்!

தாக்கப்பட்ட போலீஸ்காரர் ஒரு சிங்களவராகக்கூட இருந்திருக்கலாம். அதைத் தடுக்க வேண்டியதும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகுமே தவிர, அண்டை வீட்டுச் சிங்களவர்கள் தடியை எடுத்துக் கொண்டு கிளம்பிவிடக் கூடாது. அரசையும் மீறிக் கொண்டு, இவர்கள், தமிழ்க் குருதி சுவைக்கப் புறப்பட்டு விடுகிறார்கள் என்றால், இது முற்றிய தமிழ் வெறுப்பின் விளைவு என்பதை உணர வேண்டும்.

சிறீலங்கா முதல்வர் கொடுத்துள்ள விபரப்படி, இந்தச் 'சிங்களப் படை எடுப்பில்' கொல்லப்பட்டவர்கள் பதினாலுபேர்; அவர்களில் எட்டுப்பேர் தமிழர்கள், ஆறு பேர் சிங்களவர்கள். இதை விட, ''சிங்களப் பகுதியிலே கொல்லப்பட்ட அனைவரும் தமிழர்களே,'' என்று முதல்வர் தெரிவித்திருக்கும் (ஸ்டேட்ஸ்மென்ட் 20-8-77) செய்தி கவனத்துக்கு உரியது. ஒவ்வொரு சிங்களப் பகுதியிலும் நூற்றுக்கணக்கான தமிழர் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டதோடு, அங்கெல்லாம் தமிழர்களே கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றால், — இதைத் திட்டமிட்ட பச்சைப் படுகொலை என்று சொல்லவேண்டுமே தவிர, – மொத்தமாக ''இனக் கலவரம்'' என்று பொதுப்பெயர் சூட்டக் கூடாது.

இனக் கலவரம் என்றால், – இரண்டு பக்கத்தாரும் ஆயத்தமாக இருப்பார்கள், தாக்குவார்கள்; இரண்டு பக்கங்களிலும் சேதம் ஏற்படும். அப்படி இன்றி, சிங்களப் பகுதிகளில் கொல்லப்பட்ட கொள்ளையடிக்கப்பட்ட அனைவரும் தமிழர்களே என்றால், இது திட்டமிட்ட சிங்களவர்களின் படைஎடுப்பே தவிர வேறில்லை; தங்களை விட்டுத் தமிழர்கள் பிரிந்துபோக விரும்புகிறார்களே என்கிற கொதிப்பின் விளைவேதவிர வேறு இல்லை.

## வெறி, வெறி, வெறி!

வெறி எந்தவடிவிலேவெளிப்பட்டாலும், அது முளையிலேயே கிள்ளிஎறியப்பட வேண்டும்; அதற்குக் காரணமான சிக்கலை வெகு விரைவிலேயே தீர்த்திட வேண்டும்.

இலங்கையை விட்டு வெள்ளையர் வெளியேறியநாளிலிருந்தே, தமிழர் உரிமைகளை நசுக்கும் பணி அங்கே தீவிரமாக நடந்து வருகிறது; சிங்கள வெறியர்கள், தங்கள் பெரும்பான்மைப் பலத்தினால் தமிழர்களின் உரிமைகளைப் பறித்ததோடு அவர்களின் மீது அட்டூழியங்களையும் அவிழ்த்து விட்டு வந்திருக்கிறார்கள்.

இந்த வெறி நாடகத்தின் ஒரு புதிய கட்டம்தான், இதோ, 1977 ஆகஸ்டில் நடந்திருக்கிறது. இல்லாவிட்டால், நாட்டின் ஒரு பகுதியில் போலீஸ்காரர்களுக்கும் யாரோ சில பேருக்கும் இடையே ஏற்பட்ட மோதல், சிங்களப் பெரும்பான்மைப் பகுதியில் தமிழர்ஒழிப்புநிகழ்ச்சியாக மூள்வானேன்? அறிவுத் தெளிவும் மக்கள் குலத்தின் மீது அன்புணர்வும் உடையவர்கள், — உலகின் எந்தப் பகுதியிலே இருந்தாலும், அவர்கள் இந்தக் கொலைவெறிக்கும் அதன் அடித்தளமாக உள்ள சிறீலங்கா அரசின் மவுடீகப் போக்குக்கும் எதிராாகக் குரல் எழுப்ப வேண்டும். குறிப்பாக, அண்டை நாடுகளில் உள்ள அரசுகளும் மக்களும் இந்தப் பச்சைப் படுகொலையைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபட வேண்டும்.

## நன்மக்கள் எழுக !

சிறீலங்காவில் எத்தனையோ கட்சிகள் ஆட்சிக்கு வந்துபோய் விட்டன. ஒவ்வொரு கட்சியும் ஆட்சிக்கு வந்ததும், தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடப் போவதாகத் தம்பட்டமடிப்பதும், பிறகு நழுவிச் சிங்கள வெறிக்குச் சரணுகதி அடைவதுமே வழக்கமாக இருந்து வந்துள்ளது. இலங்கைப் பொருளாதார அமைப்பிலே அங்கே கால்கொள்ள முடியாமல் தவிக்கும் பல இடதுசாரி இயக்கங்களும் இந்த வெறிக்கு உடந்தையாகவே இருந்து வந்துள்ளன. ஆளும்கட்சி மற்றும் அங்குள்ள இடதுசாரிக் கட்சிகளின் செயல் முடக்கத் தத்துவத்தால், தமிழர் பிரச்சினை எள்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

## எண்ணம்

# குடிபெயர்ந்தோருக்கு மறுவாழ்வு

தமிழர்களுக்கு ஏதிராக சிங்களநாட்டில் சிங்கள இனவெறியர்களால் தூண்டிவிடப்பட்ட பயங்கர இனவெறிக்குப் பலியாகியவர்கள் போக — எஞ்சிய தமிழர்கள் ஏக்கம் நிறைந்த விழிகளுடன், எதிர்காலம் என்னவென்ற கேள்விக்குறியுடன் — வெறுங்கையினராய் உயிர்தப்பி தமிழ் ஈழத்தாயகத்துக்கு அகதிகளாக ஓடிவந்திருக்கிறார்கள்!

ஆகஸ்ட் 15 முதல் —ஆகஸ்ட் இறுதிவரை நடைபெற்ற சிங்கள இனவெறியின் உச்சக்கட்டக் கொடுமையின் போது தாம் பட்ட பயங்கரமான அவதிகளைப்பற்றியெல்லாம் கண்ணீர் சிந்தியபடி கதைகதையாக இவர்கள் கூறுவதைக் கேட்கும் போது நெஞ்சம் உறைந்துபோகிறது!

அளவளாவுவதும், அனுதாபம் தெரிவிப்பதும் — கண்ணீர் வடிப்பதும் – கலங்குவதும் பெருமூச்சுவிடுவதும் இந்த தமிழ் அகதிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

முதலில் தமிழ் ஈழத்துமக்கள், சிங்களநாட்டிலிருந்து விரட்டப்பட்டு அடிமைப்பட்டுக்கிடக்கும் தமது நாட்டுக்கு வந்துள்ள தமிழ்மக்களை அகதிகள் என்று கருதுவதை அடியோடு தவிர்க்க வேண்டும்; அவர்கள் அகதிகள் அல்ல, அவர்களது தாழ்விலும் வாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் தோள்கொடுத்திட அந்தமக்களை சகோதரர்களாக தம்முடன் இணைத்துக்கொள்ள தமிழ் ஈழம் எப்போதும் தயாராக இருக்கிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

சிங்கள நாட்டின் கோர இனவெறிக்கு தாக்குப் பிடித்திட முடியாமல் தமிழ் ஈழத்துக்கு ஏதுமற்றோராய் வெறுங்கையுடன் திரும்பிய தமிழர்களில் — தமிழ் ஈழத்துடன் இதற்கு முன்னர் எதுவித தொடர்புமற்றவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள்; இந்த மக்களின் மனதில் உள்ள பீதிகளையும் ஐயங்களையும் துடைத்து — இவர்களுக்கு தமிழ் ஈழத்தில் காணி நிலம் வழங்கி மறுவாழ்வு தேடிக்கொடுத்திட வழிவகை காணப்படவேண்டும்!

**இந்த மக்களுக்கு காணி நிலமும் மறுவாழ்வும் அமைத்துக் கொடுத்திடும் பணியில் வசதிபடைத்த தனியாரும் ஈடுபடலாம், அரசுடன் பேசி, தொழில், நிலம் பெற்றுக்கொடுக்கும் முயற்சியிலும் ஈடுபடலாம்; இயக்கரீதியாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்!**

தமிழர் விடுதலைக் கூட்டணி, அரசுடன் பேசி முடிக்குரிய நிலங்களைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் இப்போது ஈடுபட்டுள்ளது. அதேசமயம் – கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பொறுப்புள்ள பிரமுகர்களின் நிர்வாகத்தில் இயங்கிவரும் ''தமிழ் அகதிகள் மறுவாழ்வுச்சபை'' மறுவாழ்வுக்கான திட்டங்களை உருவாக்கிவருவதுடன் பொதுமக்களிடமிருந்தும், பொது நிறுவனங்களிடமிருந்தும் நிதிசேகரித்து வருகிறது.

**சிங்களநாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்துள்ள தமிழ்மக்களை நீண்டகாலம் முகாம்களில் வைத்திருக்காது —அவர்களுக்கு நிலம், தொழில், குடியிருப்பு வசதிகளை செய்யும் பணி தீவிரமடைய வேண்டும்!**

சிங்கள நாட்டிலிருந்து பல்வேறு பயங்கர அனுபவங்களுடன் குடிபெயர்ந்து வந்துள்ள தமிழ் அரசாங்க ஊழியர்கள், தமிழ் டாக்டர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், புகையிரத உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள் ஆகியோர் சிங்கள நாட்டுக்கு திரும்பவும் வேலைக்கு செல்வதில்லையென்று மேற்கொண்டிருக்கும் முடிவு எவராலும் சுலபத்தில் புரிந்துகொள்ளக்கூடியது! இதைத்தவிர வேறு எந்த முடிவையும் இச்சமயத்தில் அவர்களால் மேற்கொண்டிருக்க முடியாது!

**சக சிங்கள ஊழியர்களினாலும்—சிங்கள சில்லறை ஊழியர்களினாலும் — திணைக்களத் தலைவர்களினதும், பொலிசாரினதும் கண்முன்னால் — தமிழ் ஊழியர்கள் தாக்கப்பட்டபோது — வெட்டிக் கொல்லப்பட்டபோது — அவற்றைத் தடுக்கவோ பாதுகாப்பு வழங்கவோ முன்வராத அரசும், அதன் காவல்படையினரும், சிங்கள தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், இப்போது இனிக்க இனிக்கப் பேசுவதாலோ—நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் வருவதாலோ – தமிழ் அரசாங்க ஊழியர்களின் இதயத்தில் ஏற்பட்டிருக்கும் புண்ணை ஆற்றிவிட முடியாது!**

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு தக்க பாதுகாப்புத் தர மறுத்துவிட்ட அரசாங்கம்– அல்லது பாதுகாப்புத் தர வக்கற்று கிடந்த அரசாங்கம்—தமிழ் அரசாங்க ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறு நிர்ப்பந்திக்க முடியாது! எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டது போல் தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரதிநிதிகளை ஒரு மாநாட்டுக்கு அழைத்துப் பேசி— அவர்களின் விருப்பப்படியும், ஆலோசனைப்படியும் அவர்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியதே இப்போது அரசு செய்யக் கூடியதாகும்.

# கொலைக்களத்துக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றிருக்கின்றனர்; பொலிசாரின் ஆதரவுடன் தான் இது நடைபெற்றிருக்கிறது. சிங்கள நண்பர்கள் சிலரது வீடுகளில் அடைக்கலமாக நம்மில் சிலர் இருந்தோம். அப்போது அமைச்சர் ஒருவருடன் தொலைபேசியில் அந்த சிங்கள வீட்டுரிமையாளர் தொடர்பு கொண்டு எமது நிலையைத் தெரிவித்தபோது — எம்மை (அதாவது தமிழர்களை) வைத்திருப்பது ஆபத்து என்றும், அவர்களை முகாமுக்கு அனுப்பி விடும்படியும் ஆலோசனை கூறியிருக்கிறார். அமைச்சராலேயே அப்போது பாதுகாப்புத் தர முடியவில்லையென்றால் —அதே அமைச்சர்களின் வாக்குறுதிகளை நம்பி அங்கு நாம் எப்படி வரமுடியும்?''

இவ்வாறு அவர்கள் கேட்டார்கள். மிருகவெறி சில சமயங்களில் ஏற்படுவது உண்டென்றும், எப்போதும் இருப்பதில்லையென்றும், தூதுக்குழுவினர் தெரிவித்தபோது — ''இல்லை சிங்கள மக்களுக்கு மிருகவெறி நிரந்தரமாகிவிட்டது'' என்று தமிழ் ஊழியர்கள் கூறினார்கள்.

தமிழ் ஊழியர்களின் உள்ளக் குமுறலுக்கு சமாதானம் ஏதும் கூறமுடியாத தூதுக்குழுவினர், நீங்கள் கூறுவதை பிரதமரிடம் சென்று கூறுகிறோம் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நழுவினர்.

## பிரதமரிடம் கோரிக்கை

பாதிப்புக்குள்ளான தமிழ் அரசாங்க ஊழியர் நிலை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் கூட்டணி தூதுக்குழு ஒன்று பிரதமரை 7-9-77 ல் கொழும்பில் சந்தித்து சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது. இத் தூதுக்குழுவில் திரு. மு. சிவசிதம்பரம் பா.உ, க. துரைரத்தினம் பா. உ, இரா. சம்பந்தன் பா.உ, வீ. ஆனந்தசங்கரி பா.உ, தா. திருநாவுக்கரசு பா.உ, த. இராசலிங்கம் பா.உ, வெ. யோகேஸ்வரன் பா. உ, கா. பொ. இரத்தினம் பா.உ ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இச் சந்திப்பின் போது பிரதமருடன் அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, புனர் வாழ்வு பொறுப்பதிகாரியான திரு. ஜெயசிங்கா, சமூக சேவை ஆணையாளர் திரு. திஸ்ஸ தெய்வேந்திரா ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

(1) வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்களில் தமது பாதுகாப்பு கருதி வேலைக்குச் செல்ல விரும்பாத வயதில் குறைந்த ஊழியர்களுக்கு அரசசேவையிலிருந்து ஓய்வு பெற அனுமதியளிக்க வேண்டும்.

(2) இவர்களின் தற்போதைய சேவைக் காலத்துடன் மேலும் 15 வருட காலத்தை சேர்த்து இந்த ஓய்வுக்கு அனுமதியளிக்கப்படவேண்டும்.

(3) கலவரத்தின் போது உயிர்ச்சேதத்துக்கு ஆளான அரசாங்க ஊழியர்களின் குடும்பங்களுக்குப் போதிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

(4) தாம் கல்விகற்று வந்த பாடசாலைகளுக்கு தொடர்ந்தும் போக முடியாத மாணவர்களுக்கு அவர்கள் தஞ்சம் புகுந்துள்ள பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலேயே கல்வி கற்க வசதி செய்து தரப்பட வேண்டும்.

(5) வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பாதுகாப்புதேடி வந்துள்ள அகதிகளில் பலரும் வீடு வாசல்களையும் உடைமைகளையும் இழந்துள்ளார்கள். அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு, அவர்களை மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் காணிகளை வழங்கி குடியமர்த்தி, அங்கு புதிய குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தவேண்டும்.

**இடம் பெயர்ந்து வந்துள்ள தமிழ் அகதிகளுக்கு மேற்கண்ட இடங்களில் அரசாங்க காணி வழங்கப்பட வேண்டும் என்பதை பிரதமர் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாரா.**

இப் பத்திரிகை, சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1977 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சுப்பதிவு—வஸ்தியன் அச்சகம், யாழ்ப்பாணம்.

## இனக் கலவரம்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ளளவும் தீரவில்லை; மாறாக ''தமிழரை அடக்கி வைக்க வேண்டும் அல்லது அழித்து ஒழிக்க வேண்டும்'' என்கிற சிங்கள வெறிதான் தலைவிரித்து ஆடுகிறது. இந்த வரலாற்று உண்மையையும் அதை நீள விட்டால் ஏற்படக் கூடிய பயங்கர விளைவுகளையும் உணரக்கூடிய தெளிவு உடையவர்கள் சிறீலங்காவிலும் உலகின் மற்றப் பகுதிகளிலும் சிலபேராவது இருப்பார்கள். அதுகூட இல்லாத அளவுக்கு உலகிலே அறிவுப் பஞ்சமும் அன்புப் பஞ்சமும் ஏற்பட்டு விடவில்லை. அந்த நன்மக்கள் துணிவாகவும் சுறுசுறுப்பாகவும் முன்வந்து,— இந்தக் கொலை விளையாட்டுக்குக் காரணமான தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைத்து அவர்களை நிம்மதியாக வாழ விட வேண்டும்.

—சாலை இளந்திரையன்

# கழுவாஞ்சிக் குடியில் பொலிஸ் அட்டூழியம்

பட்டிருப்புத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. மதுரநாயகம் 19-8-77 சனிக்கிழமை காலை 11-30 மணியளவில் பெரிய கல்லாறு சித்தி விநாயகர் ஆலயத்தின் அருகில் கழுவாஞ்சிக் குடிப் பொலிசாரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டு கழுவாஞ்சிக் குடிப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார். பொலீசாரின் தாக்குதலினால் ஏற்பட்ட வருத்தத்தினால் மட்டக்களப்பு பிரதான மருத்துவமனையில் 11ம் வாட்டில்ஆயுதம் தாங்கிய பொலீசாரின் பாதுகாப்பில் சங்கிலியில் பூட்டப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார் பட்டிருப்பு பா-உ மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இன்று இதைத் தொடர்ந்து சின்னவத்தையை அடுத்துள்ள கோணா கொள்ளை என்ற கிராமத்துத் தமிழ் மக்களின் வீடுகளைச் சிங்களக் காடையர் தீயிட்டு அவர்களையும் தாக்கியதால் ஒன்பது நபர்கள் மேற்படி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் ஒருவர் ஆபத்தான நிலையில் உயிருக்காகப் போராடுகின்றார் என அறியப்படுகிறது.

## அமிருக்கும் சிவா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபரும் எதிர்க்கட்சித்தலைவருமான தமிழீழ முதல்வர் அமிர்தலிங்கம் அவர்களுக்கும், கூட்டணியின் மற்றோர் செயலதிபரான நல்லூர் சிவாவுக்கும் உடலளவில் தீங்கு விளைவிக்க இனவெறியர்கள் திட்டம் போட்டுள்ளனரா? இந்தக்கேள்வி தமிழ்மக்களின் உள்ளங்களில் எரிமலையாக வெடித்துள்ளது.

திரு. மு. சிவசிதம்பரம் அவர்களுக்கு அவரது கொழும்பு இல்லத்தில் வைத்து தீங்கு விளைக்கும் நோக்குடன் உலவியதாக சந்தேகிக்கப்பட்டு ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டதும், இதுபற்றி தேசிய அரசுப்பேரவையில் எதிரக்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தவாரம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்துக்கு உடலளவில் தீங்கு விளைவிக்க சமுகவிரோதிகள் திட்டமிட்டிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக சொல்லி, திரு. அமிர்தலிங்கத்துக்கு கொழும்பில் பொலிசார் பாதுகாப்பு அளித்ததாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இச் செய்திகள் தமிழ்மக்களின் உள்ளங்களில் எரிமலையை தோற்றுவித்துள்ளது.


''மில்க்வைற் செய்தி - இதழ் 21''

10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 நீம் வாசனை சோப் அல்லது
2 மெடிக்கேட்டட் சோப் அல்லது
2 பார் சோப் மேலுறைகளை
அனுப்பி மேற்படி செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விநியோகப் பகுதி,
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த: பெ. எண் 77,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org